بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 7 | இதழ் 17

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

26 ரமலான் 1443 ஹிஜ்ரி கமரி 28 ஷஹாதத் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி 28 ஏப்ரல் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

كُلُوۡا وَاشۡرَبُوۡا حَتّٰی یَتَبَیَّنَ لَکُمُ
الۡخَیۡطُ الۡاَبۡیَضُ مِنَ
الۡخَیۡطِ الۡاَسۡوَدِ مِنَ الۡفَجۡرِ۪
ثُمَّ اَتِمُّوا الصِّیَامَ اِلَی الَّیۡلِ

இருள் விலகி, விடியலின் வெண் கதிர்கள் உங்களுக்குத் தெரியும் வரை நீங்கள் உண்ணுங்கள், குடியுங்கள். பின்னர் இரவு வரை நோன்பை முழுமையாக்குங்கள். (2:188)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நோயாளிகள் மற்றும் பயணிகள் நோன்பு நோற்கக் கூடாது என்பது கட்டளையாகும். (இவர்களில்) எவரால் முடியுமோ அவர் வைத்துக் கொள்ளட்டும். எவரால் முடியாதோ அவர் வைக்க வேண்டாம் என்று அல்லாஹ் கூறவில்லை**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### ரமலானின் உண்மைத்துவம்

ரமஸ் என்பது சூரிய வெப்பத்திற்கு கூறப்படுகின்றது. ரமலானில் மனிதன் உணவு, பானம் மற்றும் அனைத்து பௌதீக இன்பங்களின் மீதும் பொறுமை செய்கின்றான். இரண்டாவதாக, அல்லாஹ்வின் கட்டளைகளுக்காக ஒரு வெப்பம் மற்றும் உத்வேகம் அவரிடம் உருவாகின்றது. ஆன்மீக மற்றும் பௌதீக வெப்பம் இணைந்து ரமலான் என்று ஆகியுள்ளது. அகராதி வல்லுநர்கள் வெப்ப காலங்களில் அந்த மாதம் வந்ததால் ரமலான் என்று கூறப்பட்டுள்ளது என்று கூறுகின்றனர். என்னைப் பொறுத்தவரை இது சரியானதல்ல. ஏனென்றால், இது அரபுகளுக்கு மட்டும் சிறப்பானதாக இருக்க முடியாது. ஆன்மீக வெப்பம் என்பதன் பொருள் ஆன்மீக இன்பத்தையும், ஆர்வத்தையும், மார்க்க வெப்பத்தையும் வழங்குவதாகும். எந்த வெப்பத்தால் கல் போன்றவை சூடாகி விடுகின்றனவோ அந்த வெப்பத்திற்கும் ரமஸ் என்று கூறப்படுகின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 194 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### பயணத்தில் நோன்பு

பயணத்தில் நோற்பது தொடர்பாக என்ன கட்டளை உள்ளது? என்று அன்னார் (அலை) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அன்னார் கூறினார்கள்:

فَمَنۡ کَانَ مِنۡکُمۡ مَّرِیۡضًا اَوۡ عَلٰی سَفَرٍ فَعِدَّۃٌ مِّنۡ اَیَّامٍ اُخَرَ என்று திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகின்றது. பொருள்: நோயாளி மற்றும் பயணி நோன்பு நோற்க வேண்டாம். இது கட்டளையாகும். எனவே எவரால் முடியுமோ அவர் வைத்துக் கொள்ளட்டும். எவரால் முடியாதோ அவர் வைக்க வேண்டாம் என்று அல்லாஹ் கூறவில்லை. எனது கருத்தின்படி பயணி நோன்பு நோற்கக் கூடாது. ஆனால் பொதுவாக பெரும்பாலான மக்கள் வைத்து விடுகின்றனர். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 266 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**ஒருவர் தமது வாயை மூடி, நாள் முழுவதும் எதுவும் உண்ணாமலும், குடிக்காமலும் இருப்பதன் பெயர் மட்டும் நோன்பு அல்ல. மாறாக, எல்லா ஆன்மீக பாதிப்புகளையும் ஏற்படுத்தக் கூடிய விஷயங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும். பொய் பேசக் கூடாது. ஏசிப்பேசக் கூடாது. புறம்பேசக் கூடாது. சண்டையிடக் கூடாது**

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

لَعَلَّکُمۡ تَتَّقُوۡنَ என்பதில் ஒரு நன்மை இதுவும் கூறப்பட்டுள்ளது. அதாவது நோன்பு நோற்கக் கூடியவர் தீமைகளிலிருந்து தப்பித்து விடுகின்றார். இந்த நோக்கம் இவ்வாறு முழுமையடைகின்றது. அதாவது உலகத்துடன் ஒரு வகையில் தொடர்பை துண்டித்துக் கொள்வதன் காரணமாக மனிதனின் ஆன்மீக பார்வை கூர்மையாகி விடுகின்றது. முன்னர் அவருக்கு தென்படாத அந்தக் குறைகளை அவர் கண்டு கொள்கின்றார். அதேபோன்று பாவங்களிலிருந்தும் மனிதன் இவ்வாறு தப்பித்து விடுகின்றான். அதாவது ஒருவர் தமது வாயை மூடி வைத்து, நாள் முழுவதும் எதுவும் உண்ணாமலும், குடிக்காமலும் இருப்பதன் பெயர் மட்டும் நோன்பு அல்ல என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். மாறாக, நோன்பு என்பது என்னவென்றால், உண்பதிலிருந்தும், குடிப்பதிலிருந்தும் வாயை தடுப்பது மட்டுமின்றி அவருக்கு எல்லா ஆன்மீக பாதிப்புகளையும் ஏற்படுத்தக் கூடிய விஷயங்களிலிருந்தும் விலகி இருக்க வேண்டும். பொய் பேசக் கூடாது. ஏசிப்பேசக் கூடாது. புறம்பேசக் கூடாது. சண்டையிடக் கூடாது. இப்போது பாருங்கள். எப்போதும் நாவை கட்டுப்பாடுடன் வைப்பதற்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நோன்பாளி குறிப்பாக தனது நாவை கட்டுப்பட்டில் வைக்கின்றார். ஏனென்றால் அவர் அவ்வாறு செய்யவில்லையென்றால் அவரது நோன்பு முறிந்து விடுகின்றது. ஒருவர் ஒரு மாதம் வரை தனது நாவை கட்டுப்பாட்டில் வைக்கின்றார் என்றால் பின்னர் எஞ்சிய 11 மாதங்களிலும் அது அவருக்கு பாதுகாப்பதற்கான ஒரு வழிமுறையாக ஆகி விடுகின்றது. இவ்வாறு நோன்பு அவரை எப்போதும் பாவங்களிலிருந்து காப்பாற்றுகின்றது. பின்னர் لَعَلَّکُمۡ تَتَّقُوۡنَ நோன்புகளின் மற்றொரு நன்மை இதுவும் கூறப்பட்டுள்ளது. அதாவது இதன் விளைவாக இறையச்சத்தின் உறுதிப்பாடு கிடைக்கின்றது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 377 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

1921: ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஸஹ்ர் செய்தோம். பின்னர் அன்னார் (ஸல்) தொழுகைக்கு தயாராகி விட்டார்கள் என்று ஹஸ்ரத் ஸைது இப்னு ஸாபித் (ரலி) அவர்கள் கூறினார்கள். நான் பாங்கிற்கும் ஸஹ்ருக்குமிடையே எவ்வளவு நேரம் இருந்தது? என்று கேட்டேன். அதற்கு ஐம்பது வசனங்கள் ஓதும் நேரம் இருந்தது என்று அன்னார் பதிலளித்தார்கள்.

1922: ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (நோன்பு திறக்காமல்) தொடர் நோன்பு வைத்தார்கள். மக்களும் அவ்வாறு தொடர் நோன்பு வைத்தார்கள். இது மக்களுக்குச் சிரமமாக இருந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மக்கள் தொடர் நோன்பு நோற்க தடை விதித்தார்கள். நீங்கள் (மட்டும்) தொடர் நோன்பு நோற்கிறீர்களே! என்று நபித்தோழர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நான் உங்களைப் போன்றவன் அல்லன். (இறைவன் புறமிருந்து) உண்ணவும், பருகவும் எனக்கு வழங்கப்படுகிறது என்று பதிலளித்தார்கள். (ஸஹீஹ் புகாரி தொகுதி 3, பாடம் நோன்பு – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை 25 மார்ச் 2022*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜப்பான் சுற்றுப்பயணம் – 2013 ஆம் ஆண்டு*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**எங்கு இந்த சம்பவங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையை எடுத்துரைக்கின்றனவோ அங்கு நமது சீர்திருத்தம் மற்றும் நமது ஈமானின் உறுதிப்பாடு போன்றவற்றின் பக்கமும் நமக்கு கவனமூட்டுகின்றன. இவற்றை கேட்டு விட்டு நமக்கு நமது சீர்திருத்தம் மற்றும் முன்னேற்றத்தின் பக்கம் கவனம் ஏற்படவில்லையென்றால் பின்னர் அதைக் கேட்பதால் எந்த பயனும் இல்லை**

**எனது ஜமாஅத் வியாபாரமாக இருந்தால் அதாவது இது வியாபாரமாகும் என்று அவர்கள் கூறியதைப்போன்று இருந்திருந்தால் அதன் பெயரும், அடையாளமும் அழிந்து போயிருக்கும். ஆனால் இது இறைவன் புறமிருந்து வந்துள்ளது. நிச்சயமாக அவன் புறமிருந்தே உள்ளது. எனவே முழு உலகம் இதனை எதிர்த்தாலும் இது வளரும். பரவும். வானவர்கள் அதனை பாதுகாப்பார்கள். இன்ஷா அல்லாஹ். ஒருவேளை ஒரு நபர் கூட என்னுடன் இல்லையென்றாலும் எவரும் எந்த உதவியும் செய்யவில்லையென்றாலும் அப்போதும் நான் நம்புகின்றேன். இந்த ஜமாஅத் வெற்றி பெறும். இன்ஷா அல்லாஹ். (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை))**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையிலிருந்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைத்த ஈமானை வலுவூட்டும் சில சம்பவங்கள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 25 மார்ச் 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு அமான் மாதம் **25 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இரண்டு நாட்களுக்கு முன்பு மார்ச் 23 ஆக இருந்தது. அந்த நாள் ஜமாஅத்தில் மஸீஹ் மவ்வூது தினமாக அடையாளம் காணப்படுகிறது. அந்த நாளில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முதல் பைஅத்தை வாங்கினார்கள். அல்லாஹ்வின் அருளால் அந்த நாளின் அடிப்படையில் ஜமாஅத்தில் கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. அந்த கூட்டங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதம், காலத்தின் அடிப்படையில் அன்னார் (அலை) அவர்களின் வருகையின் அவசியம், அன்னாரைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த முன்னறிவிப்புகள் மற்றும் அன்னார் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு போன்ற பல்வேறு அம்சங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.

காலத்தின் தேவை தொடர்பாகவும், தமது வருகையின் முக்கியத்துவமாகவும் அன்னார் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

இக்காலத்தில் இறைவன் பெரும் அருள் புரிந்துள்ளான். மேலும் தமது மார்க்கத்தில் (அதாவது இஸ்லாத்தில்) மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஆதரவாக தன்மானத்தை வெளிப்படுத்தியவாறு ஒளியின் பக்கம் மக்களை அழைப்பதற்காக உங்களில் பேசிக் கொண்டிருக்கின்ற ஒரு மனிதரை இறைவன் அனுப்பியுள்ளான். இந்த காலத்தில் குழப்பமும், சண்டை சச்சரவுகளும் நடைபெறாமல் இருந்திருந்தால் மார்க்கத்தை அழிப்பதற்காக எவ்வகையான முயற்சிகள் நடைபெறுகின்றனவோ அந்த முயற்சிகள் நடைபெறாமல் இருந்திருந்தால், பின்னர் அவரின் (வருகையின்) அவசியம் இருந்திருக்காது. மேலும் எவரையும் அனுப்புவதற்கு எந்தத் தேவையும் இருந்திருக்காது. ஆனால் தற்போது நீங்கள் பார்க்கின்றீர்கள். எல்லா புறமும், எல்லா திசையிலும் இஸ்லாத்தை அழிக்கின்ற கவலையில், சிந்தனையில் அனைத்து சமுதாயங்களும் ஈடுபட்டுள்ளன. எல்லா புறமும், வலப்புறமும், இடப்புறமும், எங்கு பார்த்தாலும் இஸ்லாத்தை எப்படியாவது அழித்து விட வேண்டும் என்ற நிலையே உள்ளது.

அந்தக் காலத்திலும் இதே நிலைதான் இருந்தது. இதே முயற்சிகள் தான் நடைபெற்று வந்தன. அன்னார் (அலை) அவர்கள் வாதம் செய்தபோது அதே நிலைதான் இருந்தது. தற்போதும் அதே நிலைதான் இருக்கின்றது. ஆனால் முஸ்லிம்கள் என்று அழைக்கப்படக் கூடிய நபர்களின் பெரும்பான்மை இந்த விஷயத்தை புரிவதில்லை.

எவ்வாறிருப்பினும் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பராஹீனே அஹ்மதிய்யாவிலும் நான் இந்த விஷயத்தை குறிப்பிட்டுள்ளேன். அதாவது இஸ்லாத்திற்கெதிராக 6 கோடி புத்தகங்கள் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. விநோதமான விஷயம் என்னவென்றால் இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் எண்ணிக்கையும் 6 கோடி ஆகும்.

அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதம் செய்த அந்த நேரத்தில் இதனை அன்னார் கூறுகின்றார்கள். அந்த நேரத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 6 கோடியாக இருந்தது. இஸ்லாத்திற்கெதிரான புத்தகங்களின் எண்ணிக்கையும் அதே அளவில் இருந்தன. தற்போது வரை இந்த நூல்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பை விட்டு விட்டாலும் கூட நமது எதிரிகள் இந்திய, பாகிஸ்தான் முஸ்லிம்களில் ஒவ்வொருவரின் கைகளிலும் ஒவ்வொரு புத்தகத்தை கொடுத்து விட்டார்கள். அல்லாஹ்வின் தன்மானமும், ரோஷமும் இல்லையென்றால் اِنَّا لَهٗ لَحٰفِظُوْنَ (நாமே இதனை பாதுகாப்போம்) என்ற உண்மையான வாக்குறுதி முழுமை பெறவில்லையென்றால் பின்னர் நிச்சயமாக புரிந்து கொள்ளுங்கள். அந்நிலையில் இன்று இஸ்லாம் உலகிலிருந்து காணாமல் போயிருக்கும். மேலும் அதன் பெயரும், அடையாளமும் கூட அழிந்திருக்கும். ஆனால் அவ்வாறில்லை. அவ்வாறு நடைபெற முடியாது. அல்லாஹ்வின் மறைவான கரம் அதனை பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 73)

தமது வாதத்திற்குப் பிறகு அல்லாஹ்வின் உதவியும், ஒத்தாசையும் தன்னுடன் எவ்வாறு இருக்கின்றது என்பதை அன்னார் (அலை) அவர்கள் கூறினார்கள். மேலும் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள முன்னறிவிப்புகள் எவ்வாறு தமக்கு ஆதரவாக நிறைவேறி வருகின்றன? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள் எவ்வாறு தமது மஹ்தி மற்றும் மஸீஹிற்கு ஆதரவாக முழுமையடைந்து வருகின்றன? என்பதையும் அன்னார் (அலை) கூறினார்கள். நான் கூறியதுபோன்று இந்த விஷயங்கள் பல்வேறு கூட்டங்களில் கூறப்படும். அந்தக் கூட்டங்களிலும் அந்த விஷயங்களில் நீங்கள் கேட்பீர்கள். MTA விலும் நிகழ்ச்சிகள் வருகின்றன. அதிலும் நீங்கள் கேட்கலாம். அதன் விளக்கங்கள் வழங்கப்படும்போது கேட்கக் கூடியவர்கள் கேட்க வேண்டும். நான் தற்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறிய சில விஷயங்களை எடுத்துரைப்பேன். அவை எப்படிப்பட்ட சம்பவங்கள் அல்லது விஷயங்கள் என்றால் அவை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நேரில் கண்ட அல்லது நேரடியாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து கேட்ட விஷயங்களாகும். அல்லது நேரடியாக பார்த்த நபர்கள் அன்னார் (ரலி) அவர்களிடம் கூறிய விஷயங்களாகும்.

இதனை எடுத்துரைப்பவர்களில் அந்நியர்களும் அடங்குவர். நம்மவர்களும் அடங்குவர். எங்கு இந்த சம்பவங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையை எடுத்துரைக்கின்றனவோ அங்கு நமது சீர்திருத்தம் மற்றும் நமது ஈமானின் உறுதிப்பாடு போன்றவற்றின் பக்கமும் நமக்கு கவனமூட்டுகின்றன. இவற்றை கேட்டு விட்டு நமக்கு நமது சீர்திருத்தம் மற்றும் முன்னேற்றத்தின் பக்கம் கவனம் ஏற்படவில்லையென்றால் பின்னர் அதைக் கேட்பதால் எந்த பயனும் இல்லை. எனவே இந்த அடிப்படையில் இந்த விஷயங்களை நாம் கேட்க வேண்டும். நாம் நமது ஈமானில் உறுதியை ஏற்படுத்த வேண்டும். மேலும் அவற்றை நமது ஈமானின் உறுதிப்பாட்டிற்கு வழிமுறையாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக எப்போதும் அதனை கேட்க வேண்டும்.

நபிமார்களின் எதிரிகள் நபிமார்களுடன் எப்போதும் இவ்வாறே நடந்து வந்துள்ளனர். அதாவது ஒருவர் ஏதேனும் அறிவார்ந்த மற்றும் இறைஞானமிக்க விஷயங்களை கூறினால் யாரோ ஒருவர் அவருக்கு கற்றுக் கொடுக்கின்றார் என்றே அவர்கள் கூறுகின்றனர். எந்த அளவுக்கென்றால், நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு யாரோ ஒருவர் கற்றுக் கொடுத்து வந்தார் என்று அன்னார் (அலை) அவர்கள் மீது திருக்குர்ஆன் தொடர்பாக இந்த ஆட்சேபனை உள்ளது. உண்மையில் அது எப்படிப்பட்ட வேதம் என்றால் அதற்கு நிகரான ஒன்றை எவராலும் முன்நிறுத்த முடியாது. அது அல்லாஹ்வின் அறைகூவல் ஆகும். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சான்றுகளின் அடிப்படையில் நான் இதனை குறிப்பிடுகின்றேன்.

அன்னார் (அலை) பராஹீனே அஹ்மதிய்யாவை எழுதியபோது துவக்கத்தில், தான் இவ்வளவு எண்ணிக்கையில் எழுதுவேன் என்று அன்னார் கூறியிருந்தார்கள். ஆனால் அதன் பிறகு அல்லாஹ் அன்னாருக்கு மாமூரிய்யத் (இறைவனால் அனுப்பப்பட்டவர்) என்ற அந்தஸ்தை வழங்கியபோது தற்போது இறைவன் இந்த விஷயங்களை தனது கரத்தில் எடுத்துக் கொண்டான் என்று அன்னார் (அலை) அவர்கள் கூறினார்கள். அதாவது இந்தப் பணியை அல்லாஹ் தனது கரத்தில் எடுத்துக் கொண்டு விட்டான். மேலும் சூழ்நிலைக்கேற்ப அவன் என்ன கட்டுரையை, கற்றுக் கொடுத்துக் கொண்டிருப்பானோ அதனை நான் எடுத்துரைப்பேன் என்று அன்னார் (அலை) கூறினார்கள்.

அப்போது அன்னார் (அலை) அவர்களுக்கு யாரோ ஒருவர் எழுதிக் கொடுத்து வருகின்றார். அதனை அன்னார் (அலை) அவர்கள் எடுத்துரைத்து வருகின்றார்கள் என்று எதிரிகள் ஆட்சேபனை செய்தனர். இது தொடர்பாக ஒரு சொற்பொழிவில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

அக்காலத்தில் ஸமீன்தார் என்ற ஒரு பத்திரிகையும், இஹ்ஸான் என்ற ஒரு பத்திரிகையும் வெளியாகி வந்தது. எதிரிகளின் இந்த பத்திரிகைகள் இவ்வாறும் எழுதி வந்தன. அதாவது சிராக் அலி சாஹிப் ஹைதராபாதி என்ற ஒரு மவ்லவி இருந்தார். அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இந்த கருத்துக்களை எழுதி அனுப்பி வந்தார். அதனை அன்னார் (அலை) அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யாவில் வெளியிட்டார்கள். எதுவரை அவர் புறமிருந்து அந்த கருத்துக்களின் தொடர் அனுப்பப்பட்டு வந்ததோ அதுவரை அன்னார் (அலை) அவர்களும் புத்தகங்கள் எழுதி வந்தனர். ஆனால் அந்த நபர் கட்டுரையை அனுப்புவதை நிறுத்தி விட்டபோது அன்னார் (அலை) அவர்களின் புத்தகமும் முடிந்து விட்டது (என்று அந்த பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன).

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மவ்லவி சிராக் அலி சாஹிப் அவர்களுக்கு என்னவாகி விட்டது என்பது புரியவில்லை. அவர் எழுதிக் கொடுத்து வந்ததாக மக்கள் கூறுகின்றனர். அவருக்கு திடீரென்று தோன்றிய நல்ல விஷயங்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எழுதி அனுப்பி வந்தார். இங்கும் அங்கும் கிடைக்கின்ற சாதாரண விஷயத்தை தம்மிடம் வைத்துக் கொண்டனார். என்றும் அவர்கள் கூறிகின்றனர். இறுதியில் மவ்லவி சிராக் அலி சாஹிப் ஒரு நூலாசிரியர் ஆவார். பராஹீனே அஹ்மதிய்யாவிற்கு எதிரில் அவருடைய நூல்களையும் வைத்து (ஒப்பிட்டு) பாருங்கள். அவருடைய சில புத்தகங்கள் உள்ளன. அவற்றை பராஹீனே அஹ்மதிய்யாவுடன் ஒப்பிட்டு பாருங்கள். அதனுடன் இதற்கு ஏதாவது தொடர்பு உள்ளதா? பராஹீனே அஹ்மதிய்யா எங்கே உள்ளது? அவருடைய நூல் எங்கே உள்ளது? என்று ஒப்பிட்டு பாருங்கள். அவ்வாறிருக்க தன்னிகரற்ற கருத்துக்களைக் கொண்ட நூல்களை பிறருக்கு எழுதிக் கொடுப்பதற்கு என்ன காரணம்? மேலும் தமது பெயரில் ஒரு கட்டுரையை வெளியிட விரும்பும்போது அதே விஷயம் அந்த நூலில் ஏன் உருவாகுவதில்லை?

எனவே முதலாவது விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கட்டுரைகளை எழுதி எழுதி அனுப்புவதற்கு அவருக்கு என்னதான் தேவை ஏற்பட்டது? ஒருவேளை அவர் அனுப்பி இருந்தாலும் கூட சிறந்த விஷயங்களை தம்மிடம் வைத்துக் கொண்டு சாதாரண விஷயங்களை பிறருக்கு கொடுத்திருப்பார். உதாரணமாக ஸூக் என்ற ஒருவரைப் போன்று. அதாவது ஸூக் என்ற ஒரு கவிஞர் வாழ்ந்துள்ளார். அவரைப் பற்றி அனைவரும் அறிவார்கள். அவர் ஜஃபர் என்பவருக்கு அதாவது பஹாதுர் ஷா ஜஃபர் என்பவருக்கு கவிதைகளை எழுதி எழுதி அனுப்பிக் கொடுத்து வந்தார். ஆனால் இன்றைய நாட்களில் ஸூகின் கவிதைகளும் ஜஃபரின் கவிதைகளும் கிடைக்கின்றன. அதைப் பார்த்த பிறகு ஸூகின் கவிதைகளில் இருக்கின்ற புலமையும், சிறப்பும் ஜஃபரின் கவிதைகளில் இல்லை என்பது தெளிவாகத் தென்படுகிறது. இதிலிருந்து தெளிவாக தெரிய வருவது என்னவென்றால், ஸூக், ஜஃபர் என்பவருக்கு ஏதாவது ஒன்றை கொடுத்து வந்தார் என்றால் அவர் தம்மிடம் எஞ்சியவற்றையே கொடுத்து வந்தார். உயர்ந்த விஷயங்களை கொடுக்கவில்லை.

சுருக்கமாக, சாதாரண அறிவு படைத்த ஒவ்வொரு மனிதனாலும் இதனை புரிந்து கொள்ள முடியும். ஒருவேளை மவ்லவி சிராக் அலி சாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கருத்துக்களை அனுப்பி வந்தார் என்றால் அவர் ஞானமிக்க சிறந்த கருத்துக்களை தம்மிடம் வைத்திருப்பார். சாதாரண அறிவு கொண்ட விஷயங்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கொடுத்திருப்பார். எனவே மவ்லவி சிராக் அலி சாஹிப் அவர்களின் நூல்களும் உள்ளன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களும் உள்ளன. அவற்றை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு பாருங்கள். எந்தத் தொடர்பும் அவற்றுடன் இல்லை. அவர் அதாவது மவ்லவி சிராக் அலி சாஹிப் தமது நூல்களில் பைபிளின் சான்றுகளை மட்டுமே ஒன்று கூட்டியுள்ளார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1300 வருடங்களில் எந்தவொரு முஸ்லிமும் கூறாத திருக்குர்ஆனின் ஞானங்களை எடுத்துரைத்துள்ளார்கள். ஆனால் அந்த இறைஞானங்களில் ஆயிரத்தில் இல்லை. பல ஆயிரம் பகுதிகளில் ஒரு பங்கு கூட அந்த மவ்லவியின் புத்தகங்களில் இல்லை.

(ஃபஸாயிலுல் குர்ஆன் (6), அன்வாருல் உலூம் தொகுதி 14 பக்கம் 350)

பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கெதிராக எதிரிகள் எழுப்புகின்ற கூச்சல்கள் மற்றும் மவ்லவிகள் மற்றும் எதிரிகளின் எதிர்ப்புகளை குறிப்பிட்டவாறு அன்னார் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதம் செய்தபோது அந்த நேரத்தில் அன்னாரின் நிலைமையும், அன்னாரை ஒப்புக் கொண்டவர்களின் நிலைமையும் வெளிப்படையில் மிகவும் பலவீனமானதாக இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்திற்கு முன்பாகவே நான் பிறந்திருந்தேன். நான் ஆரம்பத்தை பார்க்கவில்லை என்றாலும் ஆரம்ப காலத்திற்கு அருகிலுள்ள காலகட்டத்தைப் பார்த்தேன். அதாவது எனக்கு நினைவு தெரிந்தபோது அந்த காலகட்டமும் பலவீனமான காலகட்டமாகவே இருந்தது. மவ்லவிமார்கள் பல வகையில் மக்களுக்கு உணர்ச்சியூட்டி வந்தார்கள். எல்லா சாத்தியமான வழிகளிலும் துன்பத்தையும், தொல்லைகளையும் கொடுத்து வந்தனர்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 8 பக்கம் 248)

ஆயினும் அவர்களால் எந்த தடையையும் ஏற்படுத்த முடியவில்லை. அல்லாஹ்வின் பணிகள் முழுமையடைந்து கொண்டே இருந்தன.

பின்னர் ஏற்பட்டு வந்த எதிர்ப்பைப் பற்றியும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எதிர்நடவடிக்கை எவ்வாறு இருந்தது என்பதையும் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து பல முறை இந்த விஷயத்தை செவிமடுத்துள்ளேன். எதிரிகள் எப்போதும் ஏசிப்பேசும்போது கூட, இந்த மக்கள் நம்மை ஏசிப்பேசி ஏன் தமது மறுமையை சீர்கெடுத்துக் கொள்கின்றனர் என்று அன்னாருக்கு வருத்தமே ஏற்படும். அதே நேரம் ஏசிப்பேசவில்லையென்றாலும் அப்போதும் நமக்கு வேதனை ஏற்படுகின்றது. ஏனென்றால் எதிர்புகள் இன்றி ஜமாஅத் முன்னேற்றம் அடைவதில்லை. ஏசிப்பேசுகின்றபோது அந்நிலையில் எதிர்ப்பின் காரணமாக ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்றடைகின்றது என்று அன்னார் (அலை) கூறுவார்கள்.

எனவே நமக்கு ஏச்சுப் பேச்சுக்களை கேட்பதில் இன்பம் கிடைக்கிறது. எனவே ஆட்சேபனைகள் அல்லது மக்களின் ஏச்சுப்பேச்சுக்களை நாம் பொருட்படுத்தக் கூடாது என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். பின்னர் பஞ்சாபி மொழியில் ஒரு பழமொழியை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துரைத்து வந்தார்கள். அதாவது ஒட்டகம் சப்தமிட்டுக் கொண்டே இருக்கும். முதலாளி

அதன் மீது கையை வைத்து தட்டி கொடுத்து சுமையை சுமத்தி விடுகின்றார். அதேபோன்று மக்கள் என்ன வேண்டுமானாலும் கூறட்டும். நீங்கள் மென்மையுடனும், நேசத்துடனும் நடந்து வாருங்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு இந்த அறிவுரையை செய்துள்ளார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 15 பக்கம் 265)

அல்லாஹ் அருள் செய்வான். அந்த மக்களிலிருந்தே ஏற்றுக் கொள்ளக் கூடிய நபர்கள் வந்து விடுவார்கள். இந்த எதிர்ப்பு தொடர்பாக ஓரிடத்தில் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதம் செய்தபோது அன்னார் (அலை) அவர்களை சில நபர்கள் மட்டுமே ஏற்றுக் கொண்டிருந்தனர். ஆனால் அதன் பிறகு அப்துல்லாஹ் ஆதமுடன் அன்னார் (அலை) அவர்கள் போட்டி போட்டார்கள். அப்போது மக்களுக்கு ஒரு சோதனை வந்தது. அதாவது அன்னார் (அலை) அவர்களின் முன்னறிவிப்பு தமது வெளிப்படையான சொற்களின் அடிப்படையில் நிறைவேறவில்லை என்று அவர்கள் கருதினர். ஆனால் லேக்கராமுடன் அன்னார் (அலை) அவர்களின் போட்டி நிகழ்ந்தபோது அன்னார் (அலை) அவர்களின் முன்னறிவிப்பு மிகத் தெளிவான அடையாளங்களுடன் முழுமையடைந்தது. ஆனால் இந்துக்களில் அன்னார் (அலை) அவர்களுக்கு எதிரான ஆக்ரோஷம் உருவானது. அன்னார் (அலை) அவர்களை கடுமையாக எதிர்க்கத் தொடங்கி விட்டார்கள்.

அதேபோன்று மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் ஃபத்வாக்களுக்கான நேரம் வந்தபோது அப்போதும் ஜமாஅத்தின் மீது ஒரு சோதனை வந்தது. பின்னர் டாக்டர் அப்துல் ஹகீம் முர்ததான நேரத்திலும் ஜமாஅத்தின் மீது சோதனை வந்தது. சுருக்கமாக பல்வேறு நேரங்களில் அதுபோன்ற கூச்சல்களும், குழப்பங்களும் எழுந்தன. அப்போது அதனை பார்ப்பவர்கள் இனி இந்த மக்களின் கதை முடிந்தது என்று கருதினர். ஆனால் இறைவன் அந்த அனைத்து குழப்பங்களையும் அழிப்பதற்கான ஏற்பாட்டை உருவாக்கினான். ஜமாஅத்தின் அழிவிற்கு காரணமாகுவதற்கு பகரமாக அந்த குழப்பங்கள் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கும், கண்ணியத்திற்கும் காரணியாகி விட்டன. அதுபோன்றே தற்போதும் நடைபெறுகின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் பாருங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் ஜமாஅத்திற்கெதிராக எந்தெந்த வடிவில் எல்லாம் கூச்சல் குழப்பங்கள் எழுந்தன. மேலும் இனி ஜமாஅத் அழிந்து விடும் என்று மக்கள் கருதி வந்தனர். ஆனால் ஒவ்வொரு முறையும் அழிந்து போவதற்கு பகரமாக அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் முன்னரை விட அதிக முன்னேற்றம் அடைந்து கொண்டு சென்றது.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 33 பக்கம் 298)

எனவே இதுவே ஜமாஅத்தின் வரலாறு ஆகும். இறை ஜமாஅத்துகளின் வரலாறும் இதுவே ஆகும். எதிர்ப்பின் இந்த வழிமுறைகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. தற்போதும் அப்படியே உள்ளது. இதே எதிர்ப்புகளை கடந்து தான் ஜமாஅத் முன்னேற்றம் அடைந்து கொண்டு செல்கிறது. இனியும் இன்ஷா அல்லாஹ் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்லும். முன்னேற்றம் அடைந்தும் வருகின்றது. எதிரிகளும் அழுத்தம் கொடுக்கின்றனர். நயவஞ்சகர்களும் அழுத்தம் கொடுக்கின்றனர். ஆனால் அல்லாஹ் தனது பணியை முழுமை செய்தே தீருவான். அவன் செய்த வாக்குறுதிகளை அவன் முழுமை செய்தே தீருவான். இன்ஷா அல்லாஹ்.

எதிர்ப்பு தொடர்பாக ஒரு சொற்பொழிவில் அன்னார் (ரலி) அவர்கள் இவ்வாறும் கூறினார்கள்: ஓர் அம்சம் இதுவும் ஆகும். அதாவது மக்களிடத்தில் எதிர்ப்பு உள்ளது. அவர்கள் எதிர்ப்பின் காரணமாக நமது கூற்றுகளை கேட்பதன் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. அவர்களின் உள்ளங்களில் கோபம் உருவாகின்றது. இந்த விஷயம் நமக்கு தீயதாக உள்ளது. ஆனால் ஒரு நிலை இவ்வாறும் உருவாகிறது. அதாவது ஒரு நபர் எதிரியின் கூற்றுகளை கேட்கும்போது, பின்னர் உண்மையில் இந்த மக்கள் இவ்வளவு அசுத்தமானவர்களா? சற்று நாம் சென்று பார்ப்போம் என்று அவர் அதனை ஆராய்கின்றார். அவர் அதை பார்க்கும்போது பின்னர் ஆச்சரியம் அடைகின்றார். அதாவது எனக்கு அவர்கள் கூறிய விஷயங்கள் முற்றிலும் வேறொன்றாக இருக்கின்றனவே என்று அறிந்து கொள்கின்றார். அதாவது எதிரிகள் கூறிய விஷயங்கள் ஒன்றாக இருந்தன. அஹ்மதிகள் கூறுகின்ற இந்த விஷயங்கள் வேறொன்றாக உள்ளன என்பதை உணர்ந்து கொள்கின்றார். மேலும் நேர்வழியை அவர் ஏற்றுக் கொண்டு விடுகின்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு நினைவு உள்ளது. நான் சிறுவனாக இருந்தேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பள்ளிவாசலில் அமர்ந்திருந்தார்கள். சபை கூடியிருந்தது. ஒரு நபர் ராம்பூரிலிருந்து வந்திருந்தார். அவர் லக்னோ அல்லது அதற்கு அருகிலுள்ள ஓர் இடத்தை சார்ந்தவராக இருந்தார். ஆனால் ராம்பூரில் வசித்து வந்தார். உயரம் குறைந்த நபராகவும், ஒல்லியான நபராகவும் இருந்தார். இலக்கியவாதியாகவும் இருந்தார். கவிஞராகவும் இருந்தார். ராம்பூர் நவாப் சாஹிப் அவர்கள் உருது வாசகங்களின் அகராதியை எழுதுவதற்கு அவரை நியமித்திருந்தார். அவர் வந்து சபையில் அமர்ந்தார். நான் ராம்பூரிலிருந்து வந்துள்ளேன். நவாப் சாஹிபின் அவையை சார்ந்தவன் ஆவேன் என்று தனது அறிமுகத்தை அவர் எடுத்துரைத்தார். தாங்கள் இங்கு வருவதற்கு என்ன தூண்டுதல் ஏற்பட்டது? என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் நான் பைஅத்தில் கலந்து கொள்வதற்காக வந்துள்ளேன் என்று கூறினார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: அந்தப் பக்கம் அதாவது ராம்பூரின் பக்கம் எமது ஜமாஅத்தைச் சார்ந்த மிகக் குறைவாகவே இருக்கின்றனர். அந்தப் பக்கம் தப்லீக் மிகக் குறைவாகவே நடந்துள்ளது. அவ்வாறிருக்க தாங்கள் இந்தப் பக்கம் வருவதற்கு யார் தூண்டினார்?

அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த சொற்கள் இன்று வரை எனது காதுகளில் ஒலித்து வருகிறது. என்னால் இன்று வரை அதை மறக்க முடியவில்லை. உண்மையில் அந்த நேரத்தில் எனது வயது 16 ஆக இருந்தது. அந்த கேள்விக்கு பதிலாக, இன்று வருவதற்கு என்னை மவ்லவி சனாவுல்லாஹ் சாஹிப் தூண்டினார் என்று அவர் உடனடியாக கூறினார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எனது வயது குறைவின் காரணமாக அந்த நேரத்தில் அந்தக் கூற்றை புரிந்திருக்காமல் இருந்திருக்கக் கூடும். ஆனால் அந்த நபர் கூறிய பதிலைக் கேட்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சிரித்தார்கள். அது எப்படி? என்று அன்னார் (அலை) கேட்டார்கள். அதற்கு அந்த நபர் இவ்வாறு கூறினார். அதாவது மவ்லவி சனாவுல்லாஹ் சாஹிபின் புத்தகங்கள் நவாப் சாஹிபின் அவைக்கு வந்தன. நவாப் சாஹிப் அவர்களும் படித்து வந்தார்கள். என்னையும் படிக்கும்படி கூறி வந்தார்கள். அப்போது இவர் குறிப்பிடுகின்ற சான்றுகளை மிர்ஸா சாஹிப் அவர்களின் நூல்களிலிருந்தும் எடுத்துப் பார்க்க வேண்டும். அதில் என்ன விஷயம் உள்ளது? என்று பார்க்க வேண்டும் என்று நான் கூறினேன்.

இவ்வாறு அஹ்மதிய்யத்திற்கெதிராக என்னால் நல்ல விஷயங்களை ஒன்றுகூட்டி விடலாம் என்று நான் எண்ணினேன். ஆனால் அந்த சான்றுகளை எடுப்பதற்காக நான் படிக்கத் தொடங்கியபோது தங்களின் கருத்து வேறென்றாக இருந்தது. அதனால் எனக்கு மேலும் ஆர்வம் ஏற்பட்டது. மேலும் சில பக்கங்களை முன்பும், பின்பும் படிக்க வேண்டும் என்று நான் கூறினேன். நான் அதனை படித்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியம், அன்னாரின் நேர்மை, அன்னார் (ஸல்) அவர்களின் மகத்துவம் ஆகியவற்றைப் பற்றி மிர்ஸா சாஹிப் அவர்கள் எடுத்துரைக்கின்ற விஷயங்கள் இந்த மக்களின் உள்ளங்களில் ஒருபோதும் இல்லை என்பது எனக்கு தெரிய வந்தது.

பின்னர் கூறினார்கள்: எனக்கு ஃபார்ஸி மொழியில் ஆர்வம் இருந்தது. தற்செயலாக எனக்கு துர்ரே ஸமீன் ஃபார்ஸியில் கிடைத்து விட்டது. நான் அதைப் படித்தேன். நான் அதை படிக்கத் தொடங்கியபோது அதன் பின்னர் எனது உள்ளம் முற்றிலும் தெளிவாகி விட்டது. சென்று பைஅத் செய்து விட வேண்டும் என்று நான் கூறினேன். எனவே எங்கு குழப்பத்தின் காரணமாக எதிர்ப்பு ஏற்படுகின்றதோ அங்கு நன்மையும் ஏற்படுகிறது.

(செஷ்மா ஹிதாயத், அன்வாருல் உலூம் தொகுதி 22 பக்கம் 433–435)

எனவே இந்த இரண்டு நிலைமைகளையும் முன்னால் வைத்தவாறு நாமும் நமது தப்லீக்கின் செயல் திட்டங்களை தயார் செய்ய வேண்டும்.

நபிக்கு எதிர்ப்பு ஏற்படவில்லையென்றால் அப்போதும் அவர் கவலையடைகின்றார். ஏனென்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதுபோன்று எதிர்ப்புதான் முன்னேற்றத்திற்கு காரணியாக உள்ளது.

இந்தக் கருத்தை ஓரிடத்தில் எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) கூறுகின்றார்கள்: எகிப்து அரசாங்கம் ஒரு காலத்தில் பெரும் வல்லரசாக இருந்தது. அதன் அரசனுக்கு தனது வலிமை மற்றும் ஆற்றல் மீது மிகவும் பெருமை இருந்தது. அதாவது ஃபிர்அவ்னின் காலத்தில். அதுபோன்ற அரசர்களுக்கு எதிரில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு எந்த அந்தஸ்தும் இருந்திருக்கவில்லை. அவ்வாறிருந்தபோதிலும் அவர் அரசனிடம் சென்றபோது அரசன் அவரை அச்சமூட்டி எச்சரித்தான். அவரையும், அவரது சமுதாயத்தையும் அழிப்பதற்கான எண்ணத்தை வெளிப்படுத்தினான். நீர் விலகவில்லையென்றால் உம்மையும் அழித்து விடுவேன். உமது சமுதாயத்தையும் அழித்து விடுவேன் என்று கூறினான். ஆனால் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் பின்வாங்கவில்லை. மேலும் இறைவன் உமக்கு கொடுப்பதற்கு வழங்கிய செய்தியை நான் உமக்கு கொடுத்து விட்டேன். அதனை நான் கண்டிப்பாக எட்ட வைப்பேன். உலகின் எந்தவொரு சக்தியும் என்னை அதிலிருந்து தடுக்க முடியாது என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் நிலையும் இதுவாகவே இருந்தது. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் நிலையும் இதுவாகவே இருந்து. அதே நிலையைத்தான் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமும் கண்டோம் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

அனைத்து சமுதாயங்களும் அன்னார் (அலை) அவர்களுக்கு எதிரிகளாக இருந்தன. அனைத்து சமுதாயத்தை பின்பற்றக் கூடியவர்களும் அன்னார் (அலை) அவர்களை எதிர்த்தனர். மவ்லவிகள் அன்னார் (அலை) அவர்களுக்கு எதிரிகளாக இருந்தனர். பொது மக்கள் அன்னார் (அலை) அவர்களுக்கு எதிரிகளாக இருந்தனர். செல்வந்தர்களும், சிறப்புமிக்கவர்களும் அன்னார் (அலை) அவர்களின் எதிரிகளாக இருந்தனர். சுருக்கமாக, நாலா புறமும் எதிர்ப்பின் ஒரு பெரும் புயல் வீசிக் கொண்டிருந்தது. அன்னாருக்கு மக்கள் பல விஷயங்களை புரிய வைத்தார்கள். சிலர் நண்பர்களாக மாறி தாங்கள் உங்களது வாதங்களில் முடிந்த வரை குறைவு செய்து கொள்ளுங்கள் என்று கூறினர். தாங்கள் இன்ன இன்ன விஷயங்களை விட்டு விட்டால் அப்போது அனைத்து மக்களும் தங்களது ஜமாஅத்தில் இணைந்து விடுவார்கள் என்று சிலர் கூறினர். ஆனால் அன்னார் (அலை) அவர்கள், அவர்களின் எவரது கூற்றையும் பொருட்படுத்தவில்லை. மேலும் எப்போதும் தமது வாதத்தை முன் வைத்து வந்தார்கள். அதனால் எதிரிகள் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். அடிகள் விழுந்தன. கொலைகள் நிகழ்ந்தன. ஆனால் இந்த அனைத்து துன்பங்களுக்குப் பிறகும் அன்னார் (அலை) அவர்களின் போட்டி எப்படிப்பட்ட ஒரு சமுதாயத்துடன் இருந்ததென்றால் அதனை எதிர்ப்பதற்கு வெளிப்படையான ஏற்பாடுகளின் அடிப்படையில் அன்னார் (அலை) அவர்களுக்கு எந்த ஆற்றலும் இருந்திருக்கவில்லை. அவ்வாறிருப்பினும் அன்னார் (அலை) அவர்கள் போட்டியை தொடர்ந்தார்கள்.

இன்னும் கூறப்போனால் எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. நான் பலமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து இதை செவியுற்றுள்ளேன். நபியின் உதாரணம் மக்கள் கூறும் ஒரு பைத்தியக்காரப் பெண்மணியை போன்றதாகும். ஒரு கிராமத்தில் ஒரு பைத்தியக்கார பெண்மணி இருந்தார். அவள் வெளியேறும்போது சிறு சிறு பிள்ளைகள் ஒன்றுகூடி அவரை தொந்தரவு செய்து வந்தனர். அவரை கேலி செய்து வந்தனர். அவருக்கு தொல்லை கொடுத்து வந்தனர். மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்து வந்தனர். அவரும் அவர்களுக்கெதிராக அந்த சிறுவர்களை ஏசிப்பேசி தீய துஆக்களை செய்து வந்தார்.

பின்னர் இறுதியில் ஒரு நாள் கிராமவாசிகள் தங்களுக்குள் இவ்வாறு ஆலோசனை செய்தனர். அதாவது இந்தப் பெண்மணி அநீதியிழைக்கப்பட்டுள்ளார். மேலும் நமது சிறுவர்கள் அவளை அநியாயமாக தொல்லை செய்து கொண்டிருக்கின்றனர். அநீதிழைக்கப்பட்ட நிலையில் அந்தப் பெண்மணி இவர்களுக்கெதிராக துஆ செய்கின்றார். அவருடைய அந்த துஆக்கள் ஏதேனும் விளைவுகளை ஏற்படுத்தி விடக் கூடாது. எனவே நாம் நமது சிறுவர்களை தடுத்து நிறுத்த வேண்டும். மேலும் அப்போதுதான் அவர்கள் அவரை தொந்தரவு செய்ய மாட்டார்கள். மேலும் அந்தப் பெண்மணியும் இவர்களுக்கெதிராக துஆ செய்ய மாட்டார்.

எனவே இந்த ஆலோசனைக்குப் பிறகு நாளை முதல் கிராமவாசிகள் அனைவரும் தமது பிள்ளைகளை வீட்டில் அடைத்து வைத்திருக்க வேண்டும். அவர்களை வெளியில் அனுப்பக் கூடாது என்று அவர்கள் முடிவெடுத்தனர். ஆக இரண்டாவது நாள் அனைத்து மக்களும் தமது பிள்ளைகளிடம் இன்று வெளியில் செல்லக் கூடாது என்று கூறி விட்டனர். மேலும் முன்னெச்சரிக்கையாக அவர்கள் வீட்டின் கதவுகளை சங்கிலியால் கட்டி விட்டனர். பொழுது விடிந்தது. அந்த பைத்தியக்காரப் பெண்மணி வழக்கம்போல் தமது வீட்டிலிருந்து வெளியேறினார். பின்னர் சிறிது நேரம் வரை இங்கும் அங்கும் தெருக்களில் சுற்றித் திரிந்து கொண்டிருந்தார். ஒரு சமயம் ஒரு தெருவிற்கு சென்றார். பின்னர் சில சமயம் வேறொரு தெருவிற்கு சென்றார். ஆனாலும் அவருக்கு எந்த சிறுவனும் தென்படவில்லை.

இதற்கு முன்பு நிலைமை என்னவாக இருந்ததென்றால் ஒரு சிறுவர் அவரை இழுத்துக் கொண்டிருப்பார். மற்றொருவர் அவரை கிள்ளிக் கொண்டிருப்பார். வேறொருவர் அவரை தள்ளிக் கொண்டிருப்பார். ஒருவர் அவரது கைகளைப் பிடித்திருப்பார். வேறொருவர் அவரை நகையாடிக் கொண்டிருப்பார். ஆனால் இன்று எந்தவொரு சிறுவரும் அவருக்கு தென்படவில்லை. மதியம் வரை அவர் காத்திருந்தார். இன்னும் எந்த சிறுவரும் தமது வீட்டிலிருந்து வெளியே வரவில்லை என்பதை அவர் கண்டபோது பின்னர் அவர் கடைகளுக்கு சென்றார். மேலும் ஒவ்வொரு கடைக்கும் சென்று இன்று உங்களது வீடு எரிந்து விட்டதா? பிள்ளைகள் மரணித்து விட்டனரா? இறுதியில் என்ன ஆனது? அவர்கள் ஏன் தென்படவில்லை? என்று அந்தப் பெண்மணி கூறிக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு இவ்வாறு அந்தப் பெண்மணி ஒவ்வொரு கடைக்கும் சென்று கூறத் தொடங்கி விட்டார். அப்போது மக்கள் இவ்வாறு கூறினர்: ஏசிப்பேசினாலும் இவ்வாறு பதில் கிடைக்கின்றன. தீய துஆக்களை செய்கின்றார். தற்போதும் இவ்வாறு ஏசிப் பேசுகின்றார். இவ்வாறு நடக்கின்றார். எனவே பிள்ளைகளை விட்டு விட்டு இவரை ஏன் கைது செய்து வைக்கக் கூடாது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த உண்மைத்துவத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறினார்கள். நபிமார்களின் நிலையும் தமத இடத்தில் இவ்வாறே இருந்து வருகிறது. அதாவது உலகம் அவர்களை கேலி செய்கின்றது. தொல்லை கொடுக்கின்றது. அவர்கள் மீது அநீதியிழைக்கின்றது. எந்த அளவிற்கு அநீதியிழைக்கின்றது என்றால் நபிமார்களுக்கு வாழ்வதே கடினமாகி விடுகின்றது. அந்த மக்கள் அநீதியிழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் இவ்வாறு செய்யக் கூடாது என்ற எண்ணம் மக்களின் ஒரு பிரிவினரின் உள்ளத்தில் அந்த உணர்வு உருவாகத் தொடங்கி விடுகின்றது.

அன்னார் (ரலி) கூறினார்கள்: அவர்களும் அதாவது நபிமார்களும் உலகை விட்டு விட முடியாது. உலகம் அவர்களை துன்புறுத்தும்போது அவர்கள் சுயமே அவர்களை எச்சரிக்கை செய்கின்றனர். விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர். தூதுச் செய்தி வழங்குகின்றனர். ஏதாவது விஷயங்களை கூறுகின்றனர். உலகம் தங்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் அவர்களின் கூற்றை செவிமடுக்க வேண்டும் என்பதற்காக நபிமார்கள் தப்லீக்கின் பக்கம் கவனம் செலுத்துகின்றனர்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 24 பக்கம் 272 – 274)

பின்னர் நபிமார்கள் ஏன் கடினம் காட்டுகின்றனர்? என்று நபிமார்களின் கடினத்தைப் பற்றி கூறப்படுகிறது. எனவே இது தொடர்பாகவும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

நபிமார்கள் தங்களின் சொந்த இருப்பிற்காக கடினம் காட்டுவதில்லை. மாறாக, அல்லாஹ்வின் அந்தஸ்தை நிலைநாட்டுவதற்காக கடினம் காட்டுகின்றனர். ஒருவேளை சில முறை கடினம் காட்டுகின்றனர். மேலும் தன்மானம் கொள்கின்றனர் என்றால் அதுவும் இந்த காரணத்தினாலேயே அமைகின்றது. தமது சொந்த விஷயங்களில் எப்போதும் அவர்களிடம் முற்றிலும் பணிவே இருக்கின்றது. இது குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சம்பவம் ஒன்றும் உள்ளது. ஒரு முறை லாஹூரின் ஒரு தெருவில் ஒரு நபர் அன்னாரை தள்ளி விட்டார். அன்னார் (அலை) அவர்கள் விழுந்து விட்டார்கள். அதனால் அன்னார் (அலை) அவர்களின் தோழர் கோபப்பட்டு விட்டார். அவரை அடித்திருப்பார். ஆனால் அன்னார் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அந்த நபர் உண்மைக்கு ஆதரவாக தமது உத்வேகத்தில் அவ்வாறு செய்து விட்டார். மவ்லவிமார்களின்

பேச்சைக்கேட்டு விட்டு மிர்ஸா சாஹிப் பொய்யர் ஆவார். எனவே நான் அவரை பழிவாங்குவேன் என்றே அந்த நபர் புரிந்து வைத்துள்ளார். எனவே அவர் புரிந்து கொண்ட உண்மையின் காரணமாக இதனை செய்துள்ளார். ஆகவே அவரை எதுவும் கூற வேண்டாம் என்று கூறினார்கள்.

எனவே நபிமார்கள் தமது மன இச்சையின் காரணமாக பேசுவதில்லை. மாறாக, இறைவனின் கண்ணியத்தை நிலைநாட்டுவதற்காக பேசுகின்றனர். எனவே அவர்கள் எப்போதாவது கடினம் காட்டினால் அல்லாஹ்வின் நபியும் அவ்வாறே செய்கின்றார்கள் என்று கருதக் கூடாது. அவர்களுக்கும், பொது மக்களுக்கும் இடையில் பெரும் வித்தியாசம் உள்ளது. நபிமார்கள் இறைவனுக்காக செய்கின்றனர். கடினம் காட்டுகின்றனர். பொது மக்கள் தமக்காக கடினம் காட்டுகின்றனர். அன்னார் இவ்வாறு அறிவுரை செய்கின்றார்கள்.

எனவே ஒருவருக்கு இந்த உணர்வு ஏற்பட்டால், உண்மையில் நான் பலவீனமானவன் ஆவேன் என்று அவர் தன்னை கருத வேண்டும். அப்படிப்பட்ட மனிதன் வழிகெட்டுப்போக முடியாது. அவர் தமது பலவீனத்தின் பக்கம் பார்வையை வைப்பார். அல்லாஹ்விடம் உதவி வேண்டுவார். நான் உண்மையில் இருக்கின்றேன் என்று ஒருவர் உறுதி கொள்ளும்போது அப்படிப்பட்ட மனிதர் அந்த நேரத்தில் வழிகெட்டு விடுகின்றார். பின்னர் அவரிடத்தில் ஆணவம் வெளிப்பட்டு விடுகின்றது.

எனவே நபிமார்களின் முன்மாதிரியை பார்த்தவாறு எப்போதும் நாம் பணிவை வெளிப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். இதுவே பாவத்திலிருந்து தப்பிப்பதற்கான வழிமுறையும் ஆகும். இது குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள் ஒன்று உள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் முஆவியா அவர்களின் தொழுகைக்கான சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறி வந்தார்கள். அதாவது அன்னார் ஒரு முறை ஃபஜ்ர் தொழுகையை பிற்படுத்தி விட்டார்கள். ஆயினும் அன்னார் இந்த தவறின் விளைவாக கீழே விழுந்து விடவில்லை. மாறாக, முன்னேற்றம் அடைந்தார். ஷைத்தானால் அன்னாரை கட்டுப்படுத்த முடியவில்லை. இன்னும் கூறப்போனால் அன்னார் அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதற்கு முயற்சி செய்தார்கள். எனவே எவர் பாவத்தை உணர்கின்றாரோ அவர் பாவத்திலிருந்து தப்பிக்கின்றார். எப்போது பாவத்திற்கான உணர்வே இருக்காதோ அப்போது மனிதன் பாவத்தில் மூழ்கி விடுகின்றான். எனவே நம்பிக்கையாளர் اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ என்பதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். மேலும் தான் அபாயங்களிலிருந்து பாதுகாப்பாக இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இறைவனே அழைத்து கூறும்போதுதான் அவர் பாதுகாப்பாக இருக்க முடியும். எனவே மனிதன் தனது நஃப்ஸின் பலவீனத்தை ஆய்வு செய்து கொண்டே இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நபர்களின் ஆன்மீக பாதை அதாவது தனது நஃப்ஸை கணக்கிட்டுக் கொண்டிருக்கின்ற நபர்களுக்கு ஆன்மீக பாதை திறக்கப்படுகிறது. அவ்வாறு எவர் செய்வதில்லையோ அவருக்கு ஆன்மீக பாதை அடைபட்டு விடுகின்றது. அப்படிப்பட்ட மனிதன் வழிகெட்டு விடுகின்றான்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 18 பக்கம் 141, 142)

ஓரிடத்தில் அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மார்க்க உழைப்பு அல்லது உலக உழைப்பின்றி எந்த மனிதனாலும் கண்ணியத்தை பெற முடியாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நமது காலத்தில் அனைத்து கண்ணியத்தையும் இறைவன் எம்முடன் தொடர்புபடுத்தி விட்டான். இனி கண்ணியம் பெறக் கூடியவர் ஒன்று, எமது சீடராக இருப்பார் அல்லது எமது எதிரியாக இருப்பார். கண்ணியம் பெறக் கூடியவர்கள் பார்த்துக் கொள்ளட்டும்! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் கண்ணிம் பெறுவார்கள் அல்லது அன்னாரை எதிர்க்கக் கூடியவர்கள் கண்ணியம் பெறுவார்கள். மார்க்க ரீதியில் எவர் தம்மை எதிரியாக கருதுகின்றாரோ அவர் கண்ணியம் பெறுவார்.

எனவே அன்னார் கூறுகின்றார்கள்: அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். மவ்லவி சனாவுல்லாஹ் சாஹிப் அவர்களை பாருங்கள். அவர் ஒன்றும் பெரிய மவ்லவி கிடையாது. அவரைப் போன்ற ஆயிரக்கணக்கான மவ்லவிமார்கள் பஞ்சாபிலும், முழு இந்தியாவிலும் காணப்படுகின்றனர். எம்மை எதிர்ப்பதன் காரணமாக மட்டுமே அவருக்கு கண்ணியம் கிடைத்துள்ளது. அந்த மக்கள் இந்த விஷயத்தை ஒப்புக் கொண்டாலும், ஒப்புக் கொள்ளவில்லையென்றாலும் சரியே. ஆனால் உண்மை இதுதான். ஒன்று, எமது எதிர்ப்பில் இன்று கண்ணியம் உள்ளது அல்லது எமக்கு ஆதரவாக இருப்பதில் கண்ணியம் உள்ளது. ஆக ஒரு வகையில் அசல் மையப் புள்ளியாக நாமாகவே இருக்கின்றோம். எதிரிகளுக்கு ஒருவேளை கண்ணியம் கிடைக்கின்றதென்றால் அதுவும் எமது காரணமாகவே கிடைக்கின்றது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 8 பக்கம் 614)

எனவே இதனையே நாம் இன்றும் பார்க்கின்றோம். மவ்லவிமார்களுக்கு ரொட்டி கிடைக்கின்றதென்றால் அல்லது அவர்களுக்கு பதவி கிடைத்துள்ளதென்றால் அஹ்மதிய்யத்தை எதிர்ப்பதன் காரணமாகவே கிடைக்கின்றது. தற்போது சில நாடுகளில் குறிப்பாக பாகிஸ்தானில் அரசியல்வாதிகளும் அஹ்மதிய்யத்தை எதிர்ப்பதன் மூலமாக தமது பதவியை தக்க வைத்துக் கொள்வதற்கும் அரசியலை ஒளிமயமாக்கிக் கொள்வதற்கும் முயற்சி செய்கின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கெதிராக நடைபெற்ற சதித்திட்டங்களை குறிப்பிட்டவாறு அன்னார் கூறுகின்றார்கள்: அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கெதிராகவும் மக்கள் சதித்திட்டங்களை தீட்டினர். பொய்யான கொலை வழக்குகள் தொடர்ந்தனர். ஆனால் அல்லாஹ் எப்போதும் எதிரிகளை தமது நோக்கங்களில் தோல்வியுறச் செய்தான். அதேபோன்றே கொலை வழக்கு நடவடிக்கைகளில் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் சாட்சி கூறுவதற்காக வந்தார். மிர்ஸா சாஹிப் அவர்களுக்கு விலங்கிடப்பட்டிருக்கும். எனவே நவூதுபில்லாஹ் இழிவான நிலையில் அன்னார் நிறுத்தப்பட்டிருப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் அவர் வந்தார்.

அந்த வழக்கும் நமது ஜமாஅத்தின் எதிரியாக இருந்த ஆங்கிலேய டெப்டி கமிஷ்னருக்கு முன்னால் நடந்து கொண்டிருந்தது. அவர் மாவட்டத்தில் பணி நியமனம் செய்யப்பட்ட உடனேயே இவ்வாறு கூறி இருந்தார். அதாவது இந்த நபர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், எங்களது ஈஸா மஸீஹை அவமரியாதை செய்கின்றார். மஸீஹ் இறந்து விட்டதாக அவர் கூறுகின்றார். இன்று வரை அவர் தப்பித்திருக்கின்றார். அவருக்கு ஏன் தண்டனை வழங்குவதில்லை. இனி நான் அவருக்கு தண்டனை கொடுப்பேன் என்று அந்த ஆங்கிலேயர் கூறியிருந்தார்.

அவ்வாறிருந்தபோதிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த நபருக்கு முன்னால் வந்தபோது அல்லாஹ் எப்படிப்பட்ட ஆதிக்கத்தை செயல்படுத்தினான் என்றால் அன்னாரின் முகத்தை பார்த்த உடனேயே அந்த நபரின் பகைமை நீங்கி விட்டது. மேலும் தமக்கு அருகில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அமர்வதற்கு நாற்காலி கொடுத்து விட்டார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதில் அமர்ந்து விட்டார்கள். அன்னார் (அலை) அவர்களின் இழிவின் நிலையை பார்ப்பதற்காக மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி அங்கு வந்திருந்தார். ஆனால் அன்னார் (அலை) அவர்கள் நாற்காலியில் அமர்ந்திருப்பதை பார்த்தபோது அவரால் அதை பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே தனக்கும் நாற்காலி கொடுக்க வேண்டும் என்று டெப்டி கமிஷ்னர் கேப்டன் டக்லஸிடம் முறையிட்டார். அப்போது அவர் அதாவது முஹம்மது ஹுஸைன் இவ்வாறு எண்ணம்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Naib Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

கொண்டார். அதாவது குற்றவாளிக்காக நாற்காலி வழங்கப்பட்டிருக்கும்போது சாட்சிக்கு ஏன் நாற்காலி கிடைக்காது?

ஆனால் இந்த விஷயத்தை கேப்டன் டக்லஸ் கேட்டபோது அவருக்கு மிகவும் கோபம் வந்தது. மிகவும் கோபப்பட்டவாறு உனக்கு நாற்காலி கிடைக்காது என்று கூறினார். மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் கூறினார்:

எனது தந்தைக்கு லாட் சாஹிபின் அவையில் நாற்காலி கொடுக்கப்பட்டு வந்தது. எனவே எனக்கும் கொடுங்கள். நான் அஹ்லே ஹதீஸ் பிரிவின் வக்கீல் ஆவேன். நாற்காலி எனக்கு கிடைப்பது எனது உரிமையாகும் என்று கூறினார். அதற்கு புலம்புவதை நிறுத்து. பின்னால் விலகிச் செல். மேலும் நேராக நின்று விடு என்று கேப்டன் டக்லஸ் கூறினார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இழிவடைவதை பார்ப்பதற்கு பகரமாக இறைவன் அவரையே இழிவுபடுத்தி விட்டான். பின்னர் இது நீதிமன்றத்தின் அறையில் நடந்த சம்பவம் ஆகும். மவ்லவி சாஹிப் வெளியேறியபோது தமக்கு உள்ளேயும் நாற்காலி கிடைத்திருந்தது என்பதை மக்களுக்கு காட்டுவதற்காக வெளியில் வளாகத்திலிருந்த ஒரு நாற்காலி மீது அவர் அமர்ந்து விட்டார். ஆனால் பொதுவாக முதலாளி செய்வதைப் பார்த்த ஊழியர்கள் அதையே செய்வர்.

எனவே மவ்லவி சாஹிபிற்கு உள்ளே நாற்காலி கிடைக்கவில்லை என்பதை பார்த்த ஊழியர் தற்போது வெளியே வளாகத்தில் இவர் நாற்காலியில் அமர்ந்திருக்கின்றார் என்பதை கண்டார். எனவே பஹாதுர் சாஹிப் அதைப் பார்த்து விட்டால் என் மீது கோபப்பட்டு விடுவார்கள் என்று எண்ணம் கொண்டார். எனவே அவர் ஓடோடி வந்தார். உங்களுக்கு இங்கே அமருவதற்கு உரிமை இல்லை. எழுந்து விடுங்கள் என்று கூறி விட்டார். இவ்வாறு மவ்லவி சாஹிப் அவர்களுக்கு நீதிமன்றத்தில் எவ்வளவு கண்ணியம் கிடைத்து என்பதை வெளியிலிருந்த மக்களும் பார்த்துக் கொண்டனர். மவ்லவி சாஹிப் இந்த கோபத்தில் எரிந்து ஆக்ரோஷமாக முன்னேறினார். அப்போது யாரோ ஒருவர் நிலத்தில் போர்வை ஒன்றை விரித்திரிந்தார். அதில் மவ்லவி சாஹிப் அமர்ந்து கொண்டார். ஆனால் தற்செயலாக நிகழ்ந்த விஷயம் என்னவென்றால், அந்தப் போர்வைக்கு சொந்தக்காரரும் உடனே அங்கு வந்தடைந்தார். எனது போர்வையை விட்டு விடு. இதில் நீ அமர்வதால் அது அசுத்தமாகி விடும். ஏனென்றால் நீர் ஒரு முஸ்லிமிற்கு எதிராக கிறிஸ்தவர்கள் சார்பாக நீதிமன்றத்தில் சாட்சி கூறுவதற்காக வந்துள்ளீர் என்று கூறி விட்டார்.

எனவே நினைவிற் கொள்ளுங்கள்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Sec. Waqf-e-Jadid, Melapalayam)

இறைவன் புறமிருந்து உதவி வரும்போது எந்த நபரும் அதனை தடுத்து நிறுத்த முடியாது. போலீஸ் அதிகாரி என்ன, காவலர்கள் என்ன, பெரும் பெரும் மனிதர்களின் வாழ்க்கைக்கு எந்த உத்தவாதமும் இல்லை. ஒரு நொடியில் அல்லாஹ் எதிரிகளை அழித்து விட முடியும். எனவே அல்லாஹ்வின் முன்னால் குனியுங்கள். அவனிடம் துஆக்கள் செய்யுங்கள். ஆம்! நம்பிக்கையாளர்களுக்கு சோதனைகள் வருவதும் நிச்சயிக்கப்பட்டதாகும். எனவே பொறுமையுடன் பணி செய்தால் துஆக்கள் செய்து வந்தால் அல்லாஹ் அந்த அனைத்து சோதனைகளையும் நீக்கி விடுவான்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 15 பக்கம் 184– 186)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கிடையில் ஒரு விவாதம் நடந்தது. அதில் நடைபெற்ற விஷயங்கள் ஜங்கே முகத்தஸ் (புனிதப் போர்) என்ற பெயரில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூலில் வெளியாகியுள்ளன. இந்த விவாதத்தை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் தமது குத்பாவில் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஆதாரத்தின் ஒளியில் கூறுகின்றார்கள். அதாவது ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: அப்துல்லாஹ் ஆதம் உடனான விவாதத்தில் நாங்கள் கண்ட காட்சிகளிலிருந்து எங்களது அறிவு வியந்து நின்று விட்டது. அதாவது அதைப் பார்த்த உடன் முதலில் எங்களது அறிவு திகைத்து விட்டது. எங்களது ஈமான் விண்ணை எட்டி விட்டது.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) கூறினார்கள்: கிறிஸ்தவர்கள் விவாதத்தால் தொல்லைக்கு உள்ளானார்கள். மேலும் நமது எந்த தந்திரமும் எடுபடவில்லை என்பதை அவர்கள் கண்டபோது சில முஸ்லிம்களை தம்முடன் சேர்த்துக் கொண்டு அவர்கள் எள்ளி நகையாடுவதற்காக இவ்வாறு குறும்பு செய்தனர். அதாவது சில பார்வையற்றவர்களையும், சில காது கேளாதவர்களையும், சில வாய்பேச முடியாவதவர்களையும், சில ஊனமுற்றவர்களையும் அழைத்துக் கொண்டனர். மேலும் விவாகத்திற்கு முன்பாக அவர்களை ஒரு பக்கம் அமர்த்தி இருந்தனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வந்தபோது அவர்கள் இவ்வாறு கூறினர். அதாவது நாங்கள் குருடர்களையும், செவிடர்களையும், ஊமையர்களையும், ஊனமுற்றவர்களையும் உங்களுக்கு முன்னால் நிறுத்தியுள்ளோம்.

மேலும் கூறினார்கள்: பேச்சுகளால் சச்சரவுகளுக்குத் தீர்வு கிடைக்காது. நான் மஸீஹே நாஸிரியின் அல்லது ஈஸா மஸீஹின் தோற்றம் ஆவேன் என்று தாங்கள் கூறுகின்றீர்கள். ஈஸா மஸீஹ் குருடர்களுக்கு பார்வை வழங்கி வந்தார். செவிடர்களுக்கு செவிபுலனை வழங்கி வந்தார். ஊனமுற்றோர்களின் கை, கால்களை சரியாக்கி வந்தார். ஈஸா மஸீஹ் இந்தப் பணிகளையெல்லாம் செய்து வந்தார். நாங்கள் உங்களை துன்பத்திலிருந்து பாதுகாப்பதற்காக தற்போது குருடர்களையும், செவிடர்களையும், ஊனமுற்றோர்களையும் ஒன்றுகூட்டி வைத்துள்ளோம். நீங்கள் உண்மையிலேயே மஸீஹைப் போன்றவர் என்றால் இவர்களை குணப்படுத்திக் காட்டி விடுங்கள் என்று கூறினர்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) கூறி வந்தார்கள். நாங்கள் அங்கு அமர்ந்திருந்தோம். அந்த விஷயத்தைக் கேட்டு எங்களது உள்ளம் சோர்ந்து விட்டது. இந்த விஷயங்கள் எல்லாம் மேலோட்டமானவை என்று நாங்கள் கருதி வந்தோம். அதாவது ஈஸா மஸீஹைப் பற்றி கூறப்படும் அந்த விஷயங்களில் உண்மை எதுவும் இல்லை என்று எண்ணியிருந்தோம். இருப்பினும் எங்கள் உள்ளம் சோர்ந்து விட்டது. இன்று இந்த மக்களுக்கு எள்ளி நகையாடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்து விடுமே என்று அந்த விஷயத்தை கேட்டு நாங்கள் பதற்றமடைந்தோம். ஆனால் நாங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முகத்தை பார்த்தபோது அதில் வெறுப்பு மற்றும் ஆச்சரியத்திற்கான எந்த அடையாளமும் இல்லாமல் இருந்தது. அந்த மக்கள் பேசி முடித்த பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்.

பாதிரி சாஹிப்! பாருங்கள். நான் ஈஸா மஸீஹைப் போன்றவர் என்று வாதம் புரிகின்றேன். மேலும் இஸ்லாமிய போதனைக்கேற்ப அவர் இதுபோன்ற குருடர்களையும், செவிடர்களையும், ஊனமுற்றோர்களையும் குணமாக்கியதில்லை. ஆனால் உங்களின் வேதத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது உங்களிடத்தில் கடுகளவு ஈமான் இருந்தால் நீங்கள் மலையைப் பார்த்து இங்கிருந்து அகன்று விடு என்று கூறினால் அது அகன்று விடும். மேலும் நீங்கள் நோயாளிகள் மீது கை வைத்தால் அவர்கள் குணம் பெற்று விடுவார்கள். எனவே நீங்கள் இந்தக் கேள்வியை என்னிடம் கேட்க முடியாது. நானோ ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் காட்டிய அற்புதங்களையே காட்டுகின்றேன். அந்த அற்புதங்களை நீங்கள் வேண்டினால் நான் காட்டுகின்றேன். நான் அதைக் காட்டுவதற்கு தயாராக உள்ளேன். மற்றபடி இதுபோன்ற அற்புதங்களைப் பற்றி உங்களது வேதமே கூறியுள்ளது. அதாவது கடுகளவு ஈமான் இருக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் இதுபோன்ற அற்புதத்தைக் காட்ட முடியும். அதாவது ஈஸா மஸீஹ் காட்டிய அற்புதத்தைப் போன்று காட்ட முடியும். எனவே நீங்கள் எம்மை துன்பத்திலிருந்து காப்பாற்றுவதற்கு மிக நல்ல விஷயத்தை கூறியுள்ளீர்கள். மேலும் இந்த குருடர்களையும், செவிடர்களையும், ஊனமுற்றோர்களையும் ஒன்றுகூட்டி விட்டீர்கள். தற்போது இந்த குருடர்களும், செவிடர்களும், ஊனமுற்றோர்களும் உள்ளனர். உங்களிடத்தில் கடுகளவு ஈமான் இருக்குமென்றால் பின்னர் இவர்களை குணப்படுத்திக்காட்டி விடுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள். நாங்கள் பார்த்தோம். இந்த பதிலால் பாதிரிமார்கள் எப்படிப்பட்ட ஆச்சரியத்தில் உறைந்து விட்டார்கள் என்றால் பெரும் பெரும் பாதிரிமார்கள் அந்த ஊனமுற்றோர்களை இழுத்து இழுத்து விலக்கி விட்டார்கள். எனவே அல்லாஹ் தமது

நெருக்கத்திற்குரியவர்களுக்கு எல்லா சந்தர்ப்பத்திலும் கண்ணியம் வழங்குகின்றான். மேலும் எப்படிப்பட்ட பதில்களை கற்றுக் கொடுக்கின்றான் என்றால் அதன் விளைவாக எதிரி முற்றிலும் வாயடைத்து விடுகின்றான்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 23 பக்கம் 88, 89)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்பு தொடர்பான அன்னார் எடுத்துரைத்த சியால்கோட்டில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று உள்ளது. அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சியால்கோட் சென்றிருந்தார்கள். அப்போது எந்த நபர் அன்னாரது சொற்பொழிவை கேட்பதற்கு செல்வாரோ அவரது நிக்காஹ் முறிந்து விடும் என்று மவ்லவிமார்கள் ஃபத்வா வழங்கி இருந்தனர். ஆயினும் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்களின் மீதான ஈர்ப்பு எப்படிப்பட்டதாக இருந்ததென்றால் மக்கள் அந்த ஃபத்வாக்களை எவ்வகையிலும் பொருட்படுத்தவில்லை. எனவே வழிப்பாதைகளில் மக்களை செல்வதிலிருந்து தடுத்து நிறுத்துவதற்காக அந்த மவ்லவிமார்கள் காவலாளிகளை நிறுத்தி வந்தார்கள். மேலும் எவர் நிற்காமல் செல்வாரோ அவரை அடிப்பதற்காக வழிப்பாதைகளில் கற்களை ஒன்றுகூட்டி இருந்தார்கள். பின்னர் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்திலிருந்து சொற்பொழிவை கேட்காமல் இருப்பதற்காக மக்களை பிடித்து பிடித்து இழுத்துச் சென்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: அந்த நேரத்தில் சியால்கோட்டில் மாநகர ஆய்வாளராக ஒரு பிடி சாஹிப் இருந்து வந்தார். பின்னர் அவர் கண்காணிப்பாளராக ஆகி விட்டார். தற்போது அவர் என்ன பதவியில் இருக்கின்றார் என்பது தெரியவில்லை. அவர் இந்த விஷயங்களை கூறிக் கொண்டிருந்தார். அந்த ஏற்பாடுகளை பிடி சாஹிப் செய்து வந்தார். மக்கள் கூச்சலிட்டனர். மேலும் குழப்பம் செய்ய விரும்பினர். அப்போது ஹஸ்ரத் சாஹிப் அவர்களின் சொற்பொழிவை அந்த நபர் கேட்டார். அதைக்கேட்டு விட்டு அவர் ஆச்சரியம் அடைந்தார்.

இந்த சொற்பொழிவில் ஆரியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மீது ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. மிர்ஸா சாஹிப் அவர்கள் கூறியவையெல்லாம் ஒருவேளை இந்த மவ்லவிமார்களின் எண்ணங்களுக்கு எதிராக இருந்திருந்தாலும் கூட அதனால் இஸ்லாத்தின் மீது எந்த ஆட்சேபனையும் வராது. மிர்ஸா சாஹிப் கிறிஸ்தவர்களுக்கெதிராக பேசிக் கொண்டிருக்கின்றார்கள். மிர்ஸா சாஹிப் கூறுகின்ற விஷயங்கள் உண்மையென்றால் பின்னர் இஸ்லாம் உண்மையாகும் என்பதே நிரூபணமாகின்றது. இந்த விஷயங்கள் உண்மையென்றால் அதிலிருந்து இஸ்லாத்தின் உண்மையே நிரூபணமாகும். அவ்வாறிருக்க குழப்பம் செய்வதற்கு முஸ்லிம்களுக்கு என்ன அவசியம் வந்து விட்டது! அவர் அரசாங்க அதிகாரியாக இருந்தாலும் ஜல்ஸாவில் எழுந்து நின்று விட்டார்.

அவர் கூறினார்: இவர் கிறிஸ்தவர்களின் இறைவன் மரணித்து விட்டார் என்றே கூறுகின்றார். நீங்கள் ஏன் கோபப்படுகின்றீர்கள் என்று அவர் முஸ்லிம்களை நோக்கி கேட்டார். கிறிஸ்தவர்களின் இறைவன் மரணித்து விட்டதாக இவர் கூறிக் கொண்டிருக்கின்றார். இதில் நீங்கள் கோபப்படுவதற்கு என்ன விஷயம் உள்ளது. இது உங்களுக்கு நல்ல விஷயம் தானே? என்று அவர் கேட்டார்.

சுருக்கமாக, நம்முடன் அந்த மக்களின் நடைமுறை இவ்வாறே உள்ளது. அதாவது எதிரிகளின் நடைமுறைகள் இவ்வாறே இருந்து வந்துள்ளன. அவர்களில் அதாவது முஸ்லிம்களிலிருந்து ஒருவர் ஆரியர்களிடம் சென்று விட்டால் அதனால் முஸ்லிம்களுக்கு எந்த வித்தியாசமும் எற்படுவதில்லை. ஆனால் மிர்ஸா சாஹிப் அவர்களின் பேச்சை யாரும் கேட்கக் கூடாது.

அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அசல் விஷயம் என்னவென்றால், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி அவர்களின் தவறான சிந்தனை உள்ளது. முஸ்லிம்களிலிருந்து ஒருவர் தனது மார்க்கத்தை மாற்றிக் கொண்டால் நமக்கு பெரும் வித்தியாசம் ஏற்படுகின்றது.

பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஃபார்ஸி கவிதையில் இவ்வாறு கூறி வந்தார்கள்:

اے دل تو نیز خاطر ایناں نگاہ دار

کآخر کنند دعویٔ حُبِّ پیمبرم

(தாரீகே ஷித்தி மல்கானா, அன்வாருல் உலூம் தொகுதி 7 பக்கம் 192)

உள்ளமே! நீ இந்த மக்களை கருத்தில் கொள். ஏனென்றால் இறுதியில் இவர்கள் எனது தூதர் (ஸல்) அவர்கள் மீது நேசம் கொள்வதாக வாதம் செய்கின்றனர். எனவே எந்நிலையிலும் இவர்கள் மார்க்கத்தை மாற்றினால் நமக்கு அதனால் வேதனை ஏற்படுகின்றது.

ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒருவர் இவ்வாறு கூறினார்:

அதாவது நான் தங்களை மிகவும் புகழ்கின்றேன். ஆனால் உங்களிடம் ஒரு மாபெரும் தவறு ஏற்பட்டுள்ளது. ஆலிம்கள் எவருடைய பேச்சையும் ஏற்றுக் கொள்வதில்லை என்பதை தாங்கள் அறிவீர்கள். ஏனென்றால் அவ்வாறு ஏற்றுக் கொண்டு விட்டால் நமக்கு அது இழிவாகும். இந்த விஷயம் இன்ன நபருக்கு தோன்றியுள்ளது. இவருக்கு தோன்றவில்லை என்று மக்கள் கூறுவர். இதனை அவர்கள் அறிந்துள்ளனர். எனவே அவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு சிறந்த வழி என்னவென்றால், அவர்களின் வாயிலிருந்தே விஷயத்தை கூற வைக்க வேண்டும். மஸீஹ் மரணித்த விவகாரம் தங்களுக்கு தெரிய வந்தபோது தாங்கள் குறிப்பிட்ட ஆலிம்களுக்கு தனித்தனியாக விருந்தளித்திருக்க வேண்டும். ஒரு கூட்டம் நடத்தி இந்த விஷயத்தை அவர்களுக்கு முன்னால் வைத்திருக்க வேண்டும்.

அதாவது மஸீஹ் உயிருடன் இருக்கின்றார் என்ற கொள்கை கிறிஸ்தவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கின்றது. அவர்கள் ஆட்சேபனை செய்து இஸ்லாத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றனர் என்று அவர்களுக்கு முன்னால் இந்த விஷயத்தை வைத்திருக்க வேண்டும். உங்களது நபி மரணித்து விட்டார். எங்களது மார்க்கத்தின் தோற்றுனரோ வானத்தில் இருக்கின்றார். எனவே அவரே மேன்மையானவர். இன்னும் கூறப்போனால் அவரே இறைவனாக இருக்கின்றார் என்று கிறிஸ்தவர்கள் கூறுகின்றனரே! இதற்கு என்ன பதில் கொடுப்பது? என்று நீங்கள் கேட்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் தாங்கள் எந்த ஆலிம்களை அந்த நேரத்தில் விருந்திற்கு அழைத்திருந்தீர்களோ அந்த ஆலிம்கள், தாங்களே கூறுங்களேன் என்று கூறியிருப்பார்கள். இதற்கு என்ன பதில் என்று தாங்கள் கூறுங்கள் என்று கூறியிருப்பார்கள். அப்போது உங்களின் கருத்தே சரியானதாக இருக்கும்.

எனது எண்ணம் என்னவென்றால், இன்ன இன்ன வசனங்களிலிருந்து ஹஸ்ரத் மஸீஹின் மரணம் நிரூபணமாகி விட்டது என்று நீங்கள் அப்போது கூறியிருக்கலாம். அப்போது இந்த விஷயம் சரிதானே. மேலும் நீங்கள் பிஸ்மில்லாஹ் கூறி அறிவிப்பு செய்து விடுங்கள். நாங்கள் அதை ஆதரிப்பதற்கு தயாராக இருக்கின்றோம் என்று ஆலிம்களும் உடனடியாக கூறியிருப்பார்கள். இவை அந்த நபர் மவ்லவிமார்களை ஒப்புக் கொள்ளச் செய்வதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கூறிய விஷயமாகும்.

அடுத்து அவர் கூறுகின்றார்: அதேபோன்று இந்த விஷயம் பின்னர் எழுந்திருக்கும். அதாவது ஹதீஸ்களில் மஸீஹ் மீண்டும் வருவதாக குறிப்பு உள்ளது. ஆனால் மஸீஹ் (அலை) மரணித்து விட்டார். அவ்வாறிருக்க இதற்கு என்ன பொருளை கூறுவது? என்று அவர்கள் கேட்டிருப்பார்கள். அப்போது தாங்களே மஸீஹ் ஆவீர்கள் என்று தங்களைப் பற்றி யாராவது ஒரு ஆலிம் கூறியிருப்பார். மேலும் அனைத்து ஆலிம்களும் அதன் மீது ஆமோதிக்கும் முத்திரையை பதித்திருப்பார்கள்.

இந்த ஆலோசனையை கேட்டு விட்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஒருவேளை எனது வாதம் மனித திட்டமாக இருந்திருந்தால் நிச்சயமாக நான் அவ்வாறே செய்திருப்பேன். ஆனால் அது இறைக்கட்டளையினால் அமைந்துள்ளது. இறைவன் எவ்வாறு புரிய வைத்தானோ அதுபோன்றே நான் செய்தேன். எனவே மனித திட்டங்களும், ஏமாற்று வேலைகளும் இறைத் திட்டங்களுக்கு எதிராக இருக்கின்றன. இறை ஜமாஅத்துகள் அவற்றைக்கண்டு ஒருபோதும் அஞ்சுவதில்லை. இது எமது பணி அல்ல. இது இறைவனின் பணியாகும். அவனே இந்த தூதுச் செய்தியை எட்ட வைப்பான்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 12 பக்கம் 196, 197)

சூரிய சந்திர கிரகணம் நமது ஜமாஅத்தில் மிகவும் பிரபலமானதாகும். இது குறித்தும் ஒரு

எதிரி மவ்லவி அநேகமாக அவர் குஜராத்தைச் சார்ந்தவராக இருந்தார். மிர்ஸா சாஹிபின் வாதத்தைக்கேட்டு ஒருபோதும் ஏமாற்றத்திற்குள்ளாகி விடாதீர்கள் என்று அவர் மக்களிடம் கூறி வந்தார். அவரது காலத்தில் சூரியனுக்கும், சந்திரனுக்கும் ரமலான் மாதத்தில் மஹ்தியின் அடையாளமாக கிரகணம் ஏற்படும் என்று ஹதீஸ்களில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. இந்த முன்னறிவிப்பு நிறைவேறி விடாத வரை அதாவது ரமலான் மாதத்தில் சூரியனுக்கும், சந்திரனுக்கும் கிரகணம் ஏற்படாத வரை அன்னாரது வாதத்தை ஒருபோதும் உண்மையானதாக கருதாதீர்கள் என்று அவர் கூறினார்.

தற்செயலாக நடந்த விஷயம் என்னவென்றால், அவர் உயிருடன் இருக்கும்போதே சூரிய, சந்திர கிரகணம் பற்றிய முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது. அந்த நபரின் பக்கத்து வீட்டில் ஓர் அஹ்மதி இருந்தார். அவர் கூறுகின்றார்: சூரிய கிரகணம் ஏற்பட்டபோது அந்த மவ்லவி இந்த பற்றத்தால் தனது வீட்டின் மேல்தளத்திற்கு ஏறி நடக்கத் தொடங்கி விட்டார். மேலும் நடந்து கொண்டே இருந்தார். மேலும் ''யே லோக் கும்ரா ஹோன்கே'' அதாவது இனி மக்கள் வழிகெட்டு விடுவார்கள் என்று அவர் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தார். அதாவது அவர் புரிந்த விஷயம் என்னவென்றால், முன்னறிவிப்பு நிறைவேறி விட்டதால் மக்கள் மிர்ஸா சாஹிபை ஏற்றுக் கொண்டு வழிகெட்டு விடுவார்கள். ஆனால் வழிகெட மாட்டார்கள். மாறாக, அதனால் நேர்வழி பெறுவார்கள் என்பதை அவரால் புரிய முடியவில்லை.

அதேபோன்று முந்தைய வேதங்களில் காணப்படுகின்ற அனைத்து அடையாளங்களும் முழுமையடைந்து விட்டன என்பதை கிறிஸ்தவர்களும் ஒப்புக் கொள்கின்றனர். கிறிஸ்தவர்களும் ஒரு வகையில் இதனை ஒப்புக் கொள்கின்றனர். ஆயினும் மற்றொரு பக்கம் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வாதத்தைக்கேட்டு இந்த நேரத்தில் தற்செயலாக ஒரு பொய்யர் வாதம் செய்து விட்டார் என்று கூறி வந்தனர். முஸ்லிம்கள் கூறுவதைப் போன்று அதாவது அடையாளங்கள் நிறைவடைந்து கொண்டிருக்கின்றன. ஆனால் துரதிஷ்டம் என்னவென்றால், தற்போது ஒரு பொய்யர் வாதம் செய்து விட்டார். இதுவே தற்போது முஸ்லிம்களின் நிலையாகும். ஆனால் விநோதமான விஷயம் என்னவென்றால், அதுபோன்ற நல்வாய்ப்பு பொய்யருக்கு கிடைக்கின்றது. உண்மையாளருக்கு கிடைப்பதில்லை.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 56)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கடந்த காலத்தைக் குறித்து அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு தீமையும் படிப்படியாக உருவாகின்றது. ஒரு நபர் இரவில் உண்மையாளராக தூங்கினார். காலையில் மிகக் கடுமையான பொய் பேசினார் என்பது ஒருபோதும் நடப்பதில்லை. ஆனால் ஒருவர், முதலில் மனிதர்கள் மீதும் பொய் பேசி வந்தார். தற்போது காலையில் எழுந்து அவர் இறைவன் மீது இட்டுக்கட்டுகின்றார் என்பது சாத்தியமாகும். இதற்கேற்ப நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்தின் முந்தைய வாழ்க்கையை பார்க்கின்றோம். அப்போது அன்னார் (அலை) இங்குள்ள இந்துக்களிடமும், கிறிஸ்தவர்களிடமும், சீக்கியர்களிடமும், முஸ்லிம்களிடமும் மீண்டும் மீண்டும் இந்த அறிவிப்பை செய்தார்கள். அதாவது நீங்கள் எனது முந்தைய வாழ்க்கையிலிருந்து ஏதாவது ஆட்சேபனையை செய்து காட்டுங்கள். ஆனால் எவருக்கும் அந்த தைரியம் வரவில்லை. இன்னும் கூறப்போனால், அன்னார் (அலை) அவர்களின் பரிசுத்த வாழ்க்கையை அவர்கள் ஆமோதித்திருந்தார்கள்.

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி பிற்காலத்தில் கடுமையான எதிரியாக ஆகி இருந்தார். அவரும் தமது பத்திரிகையில் அன்னார் (அலை) அவர்களின் தூய வாழ்க்கை அப்பழுக்கற்றது என்பதற்கு சாட்சி வழங்கியுள்ளார். மேலும் மிஸ்டர் ஜஃபர் அலி கான் அவர்களின் தந்தையார் தமது பத்திரிகையில் அன்னார் (அலை) அவர்களின் ஆரம்ப கால வாழ்க்கையை குறித்து அன்னார் மிகத் தூய்மையானவராக இருந்தார்கள் என்று சாட்சி கூறியுள்ளார். எனவே 40 ஆண்டுகள் வரை எந்த நபர் குறையின்றி இருந்தரோ, மேலும் எவரது வாழ்க்கை பரிசுத்தமானதாக இருந்ததோ அவர் எப்படி இரவோடு இரவாக தலைகீழாக மாறி விட்டார்? சீர்கெட்டு விட்டார்? என்று கூற முடியும்.

மனநல அறிஞர்கள் இதனை ஒப்புக் கொண்டுள்ளார்கள். அதாவது உளவியல் நிபுணர்கள் இவ்வாறு கூறுகின்றனர். ஒவ்வொரு குறையும், ஒழுக்கக் குறைபாடும் கொஞ்சம் கொஞ்சமாகவே உருவாகின்றது. திடீரென எந்த ஒழுக்க மாறுதல்களும் நடைபெறுவதில்லை. எனவே அன்னாரது கடந்த காலம் எப்படி குறையற்றதாகவும், அப்பழுக்கற்றதாகவும், ஒளிமயமானதாகவும் இருக்கின்றது என்பதைப் பாருங்கள்.

(மீ ஆரே ஸதாகத், அன்வாருல் உலூம் தொகுதி 6 பக்கம் 60, 61)

பின்னர் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எவ்வாறு உதவி செய்து வந்தான் என்பதைப் பற்றி நாம் பார்க்கின்றோம். அன்னார் (ரலி) அவர்கள் மேலும் எழுதுகின்றார்கள்: இறைவனின் தூதராக இருப்பவருடன் இறை உதவியும் இருக்கும். இறையுதவி இல்லையென்றால் அவர் இறைத்தூதரும் இல்லை. நபியும் இல்லை. அவரை அழிப்பதற்கு மக்கள் நெருங்கி விடுகின்றனர். ஆனால் இறை உதவி வந்து விடுகின்றது. அவருக்கு வெற்றி கிடைத்து விடுகின்றது. அவரது எதிரிகளின் திட்டங்கள் மண்ணோடு மண்ணாக புதைக்கப்படுகின்றன. இதே விவகாரம் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை எதிர்த்தவர்களுடனும் நடந்துள்ளது. அன்னார் (அலை) அவர்களை பல வகையில் கொலை செய்வதற்கு முயற்சி செய்யப்பட்டது. மக்கள் கொலை செய்வதற்காக நபர்களை நியமித்தார்கள். மேலும் அவர்கள் தமது எண்ணங்களில் தோல்வி அடைந்தார்கள். அன்னார் (அலை) மீது பொய்யான கொலை வழக்குகள் தொடரப்பட்டன.

எனவே மார்ட்டின் கிளார்க் என்பவர், பொய் கொலை வழக்கு ஒன்றை தொடர்ந்தார். மிர்ஸா சாஹிப் அவர்கள் தான் என்னை கொலை செய்ய அனுப்பினார் என்று ஒரு நபர் கூறியிருந்தார். மேலும் இந்த மஹ்தி மற்றும் மஸீஹ் என்று வாதம் புரிபவரை யாரும் இதுவரை ஏன் பிடிக்கவில்லை? நான் அவரை பிடிப்பேன் என்ற வாதத்துடன் நீதிபதி வந்திருந்தார். வழக்கு வந்தபோது என்னைப் பொறுத்தவரை இது பொய் வழக்காகும் என்று அதே நீதிபதிதான் கூறினார். இதையே அவர் மீண்டும் மீண்டும் கூறினார்.

இறுதியில் அந்த நபர் கிறிஸ்தவர்களிலிருந்து தனியாக விலக்கி போலீஸ் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டார். அந்த நபர் அழத் தொடங்கினார். என்னை கிறிஸ்தவர்கள் தான் இவ்வாறு கூறுமாறு கற்றுக் கொடுத்தனர் என்று அவர் கூறி விட்டார். இவ்வாறு இறைவன் இந்த பொய்யான குற்றச்சாட்டை ஒன்றுமில்லாமல் ஆக்கி விட்டான்.

அதேபோன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நமது ஜமாஅத்தின் ஓர் உணர்வுமிக்க முபலிலிக் மவ்லவி உமருத்தின் ஷிம்லவி சாஹிப் ஆவார்கள். அன்னார் தனது சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்கள். அன்னாரும் இதே அளவுகோலை வைத்துதான் அஹ்மதி ஆகி இருந்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஷிம்லாவில் மவ்லவி முஹம்மது ஹுஸைன், மவ்லவி அப்துர் ரஹ்மான் ஸியா மற்றும் சில நபர்கள் இப்போது மிர்ஸா சாஹிப் அவர்களுக்கு எதிரில் நாம் என்ன வழிமுறையை மேற்கொள்ள வேண்டும்? என்று ஆலோசனை செய்து கொண்டிருந்தனர். அப்போது, நான் இனி விவாதம் செய்ய மாட்டேன் என்று மிர்ஸா சாஹிப் அவர்கள் அறிவிப்பு செய்து விட்டார்கள். நாம் பிரசுரங்கள் மூலம் விவாதத்திற்கு அழைப்பு கொடுப்போம். ஒருவேளை அன்னார் விவாதத்திற்கு வந்து விட்டால், இவர் இதற்கு முன்பு பிரசுரம் கொடுத்து நாங்கள் யாருடனும் விவாதம் செய்ய மாட்டோம் என்று கூறினார். ஆனால் தற்போது விவாதத்திற்கு தயாராகி விட்டார் என்று நாம் கூறுவோம். ஒருவேளை அவர் விவாதத்திற்கு தயாராகவில்லையென்றால் பாருங்கள்! மிர்ஸா சாஹிப் தோற்று விட்டார் என்று நாம் கூச்சலிடுவோம் என்று மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் கூறினார்.

அப்போது மவ்லவி உமருத்தீன் சாஹிப் அவர்கள், இதற்கு என்ன அவசியம் வந்து விட்டது? நான் செல்கின்றேன். அன்னாரை கொலை செய்து விடுகின்றேன். விவகாரமே தீர்ந்து விடும் என்று கூறினார்கள். அதற்கு சிறுவனே! உனக்கு என்ன தெரியும். அவை அனைத்தும் ஏற்கனவே செய்யப்பட்டு விட்டன என்று மவ்லவி முஹம்மது ஹுஸைன் கூறினார். அப்போது எவருக்கு இறைவன் இவ்வளவு பாதுகாப்பு வழங்குகின்றானோ அவர் இறைவன் புறமிருந்தே தோன்றி இருப்பார் என்ற விஷயம் மவ்லவி உமருத்தீன் சாஹிப் அவர்களின் உள்ளத்தில் குடிகொண்டு விட்டது. அன்னார் சிறுவராக இருந்தார்கள். இருப்பினும் அன்னார் கூறினார்கள்: இவ்வளவு பாதுகாப்பை அல்லாஹ் அவருக்கு வழங்குகின்றான். இவ்வளவு திட்டங்களுக்குப் பிறகும் அவர் தப்பித்துள்ளார் என்றால் பின்னர் நிச்சயமாக அன்னார் இறைவன் புறமிருந்தே தோன்றியுள்ளார்கள்.

பின்னர் அன்னார் பைஅத் செய்து விட்டு திரும்பி செல்லும்போது அன்னாரை மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ரயில் நிலையத்தில் சந்தித்தார். நீ எங்கே? என்று கேட்டார். காதியானில் பைஅத் செய்து வந்துள்ளேன் என்று அன்னார் கூறினார்கள். அதற்கு நீ மிகவும் மோசமானவன். உமது தந்தைக்கு இதனை எழுதி விடுவேன் என்று மவ்லவி முஹம்மது ஹுஸைன் கூறினார். அதற்கு மவ்லவி சாஹிப்! என்ன நடந்ததோ அவை அனைத்தும் தங்களின் மூலமாகவே நடந்துள்ளது என்று அன்னார் பதிலளித்தார்கள்.

எனவே எதிரிகள் அவரை அதாவது அல்லாஹ்வின் அன்பரை கொல்ல விரும்புகின்றார்கள். ஆனால் அவர் காப்பாற்றப்படுகின்றார். இறைவன் தனது ஞானத்தால் அவருக்கு உதவி செய்கின்றான். மேலும் எல்லா மைதானத்திலும் அவருக்கு கண்ணியம் வழங்குகின்றான்.

(மீஆரே ஸதாகத், அன்வாருல் உலூம் தொகுதி 6 பக்கம் 61, 62)

அதேபோன்று நான் மிர்ஸா சாஹிபை அழித்து விடுவேன் என்றும் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி வாதம் செய்து வந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இளமை கால நண்பராக மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி இருந்தார். அன்னார் (அலை) அவர்களுடன் அவர் தொடர்பு வைத்திருந்தார். மேலும் அன்னார் (அலை) அவர்களின் கட்டுரைகளை எப்போதும் பாராட்டி வந்தார். அவர் அன்னாரின் வாதத்திற்குப் பிறகு உடனடியாக இந்த அறிவிப்பை செய்தார். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதம் செய்தபோது நானே இந்த நபரை வளர்த்து விட்டேன். இனி நானே இவரை அழித்து விடுவேன் என்று அவர் அறிவிப்பு செய்தார். பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொந்த உறவினர்கள் அறிவிப்பு செய்தார்கள். இன்னும் கூறப்போனால் சில பத்திரிகைகளில் இந்த நபர் வியாபாரம் நடத்துகின்றார். இவர் பக்கம் எவரும் கவனம் செலுத்த வேண்டாம் என்ற அறிவிப்பு அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. இவ்வாறு அவர்கள் முழு உலகத்தையும் வழிகெடுக்க முயற்சித்தனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு நினைவு தெரிந்த பிறகு நிகழ்ந்த விஷயமாகும். விவசாய ஏற்பாட்டில் கமீன் என்று அழைக்கப்படும் பணியாளர்கள் இருந்தனர். அன்னார் (அலை) அவர்களின் வீட்டுப் பணிகளை செய்வதற்கு மறுத்து விட்டனர். அதாவது விவசாய பணிகளுக்கான சூழல் இருந்தபோதும் அந்தப் பகுதியின் விவசாயியாக இருந்தபோதும் அன்னாரது வீட்டிற்கு வந்து பணி செய்ய அந்தப் பணியாளர்கள் மறுத்து விட்டார்கள். உண்மையில் அவர்களை தூண்டி விட்டவர்களும் எங்களது உறவினர்களாகவே இருந்தனர். சுருக்கமாக, நம்மவர்களும், அந்நியர்களும் இணைந்து அன்னார் (அலை) அவர்களை அழிப்பதற்கும், ஒழிப்பதற்கும் விரும்பி இருந்தார்கள். ஆனால் இறைவன் தனது அடியாரிடம் கூறினான்: உலகில் ஓர் எச்சரிச்கையாளர் தோன்றினார். ஆனால் உலகம் அவரை ஒப்புக் கொள்ளவில்லை. ஆயினும் இறைவன் அவரை ஒப்புக் கொள்வான். மேலும் மிக வலுவான தாக்குதல்களால் அவரது உண்மையை வெளிப்படுத்தி விடுவான்.

ஓர் இயலாத ஏழை மனிதன் காதியான் போன்ற ஊரில் எங்கு வாரத்தில் ஒரே ஒரு முறை மட்டுமே தபால்கள் வந்தனவோ அங்கு வசித்து வருகின்றார். மேலும் எந்த ஊரில் ஒரே ஒரு துவக்க பள்ளிக்கூடம் தான் இருந்ததோ, மேலும் எங்கு ஒரு ரூபாய்க்கு கோதுமை கூட மக்களுக்கு கிடைக்காமல் இருந்ததோ அங்கு ஓர் ஆதரவற்ற நபர் தோன்றுகின்றார். மேலும் அந்த மனிதரும் எப்படிப்பட்டவர் என்றால் அவர் மவ்லவியும் கிடையாது. பெரும் சொத்துக்களுக்கு முதலாளியும் கிடையாது. (நிச்சயமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு கண்ணியமிக்க குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். ஆயினும் ராஜாக்களையும், நவாப்மார்களையும் போன்று ஏராளமான பெரும் சொத்துக்களுக்கு எஜமானராக இருக்கவில்லை). அந்த நபர் எழுந்து நின்று உலகத்திற்கு முன்னால் இந்த அறிவிப்பை செய்தார். அந்த நபர் முதல் நாளிலேயே இறைவன் எனது பெயரை உலகின் எல்லைகள் வரை எட்ட வைப்பான் என்று கூறினார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயர் உலகின் எல்லைகள் வரை எட்டவில்லை என்று இன்று கூறக் கூடியவர் யார் இருக்கின்றார்? (குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 1 பக்கம் 324, 325)

நாம் இன்று பார்க்கின்றோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயர் சென்று சேராத இடம் என்று உலகில் எந்த இடமும் இல்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பொய்யரின் அழிவிற்கு அவரது பொய்யே போதுமானதாகும். ஆனால் எந்தப் பணி அல்லாஹ்வின் கம்பீரம் மற்றும் அவனது தூதரின் அருட்களை வெளிப்படுத்துவதற்காகவும், ஆதாரத்திற்காகவும் இருக்குமோ மேலும் இறைவன் தனது கரத்தாலே நாட்டிய செடியாக எது இருக்குமோ அதனை வானவர்கள் சுயமே பாதுகாக்கின்றனர். அதனை யாரால் அழிக்க முடியும்? நினைவிற் கொள்ளுங்கள். எனது ஜமாஅத் வெறும் வியாபாரமாக இருந்தால் அதாவது இது வியாபாரமாகும் என்று அவர்கள் கூறியதைப்போன்று இருந்திருந்தால் அதன் பெயரும், அடையாளமும் அழிந்து போயிருக்கும். ஆனால் இது இறைவன் புறமிருந்து வந்துள்ளது. நிச்சயமாக அவன் புறமிருந்தே உள்ளது. எனவே முழு உலகம் இதனை எதிர்த்தாலும் இது வளரும். பரவும். வானவர்கள் அதனை பாதுகாப்பார்கள். இன்ஷா அல்லாஹ். ஒருவேளை ஒரு நபர் கூட என்னுடன் இல்லையென்றாலும் எவரும் எந்த உதவியும் செய்யவில்லையென்றாலும் அப்போதும் நான் நம்புகின்றேன். இந்த ஜமாஅத் வெற்றி பெறும். இன்ஷா அல்லாஹ். (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 148)


எனவே நாம் அன்னாரின் பைஅத்திற்குரிய உரிமையை செலுத்துபவர்களாக ஆக வேண்டும். அன்னார் (அலை) அவர்களின் தூதுச் செய்தியை உலகில் எட்ட வைத்து அல்லாஹ்வின் அருட்களுக்கும், அருட்கொடைகளுக்கும் நாம் வாரிசாக வேண்டும். அல்லாஹ் நமக்கு நற்பேறு வழங்குவானாக. நாம் நன்றிகேடு காட்டுபவர்களாக இருக்கக் கூடாது. மாறாக, நன்றியுள்ளவர்களில் கணக்கிடப்பட வேண்டும். அல்லாஹ் அதற்கு நமக்கு நற்பேறு வழங்குவானாக.

இன்று நான் ஒரு Website ற்கான அறிவிப்பையும் செய்வேன். துவங்கி வைப்பேன். இதுவும் தப்லீக்கின்றான Website ஆகும். உலகின் எல்லைகள் வரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தி சென்று சேர்வதற்கான வழிமுறையாகும். அது ஜமாஅத்தின் குர்திஷ் மொழி Website ஆகும். Islamahmadiyya.krd என்பது அந்த Website ஆகும். இந்த Website ஐ டாக்டர் இஸ்மாயீல் முஹம்மது சாஹிப் மேற்பார்வை செய்து வருகிறார்கள். அன்னாருடன் குர்திஷ் ஜமாஅத்தின் உறுப்பினர்களின் ஒரு குழுவும் உள்ளது.

இந்த Website–ன் நோக்கம் என்னவென்றால், குர்திஷ் மொழி அறியக் கூடிய பார்வையாளர்களுக்கு அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கையை முதல் முறையாக தமது மொழியில் சுயமே படித்துக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். இந்த Website குர்திஷ் மொழியின் ஸரானி Dialect ஐ உள்ளடக்கியுள்ளது. அத்துடன் பாதீனி Dialect ன் சில பகுதிகளும் உள்ளன. Website ல் செய்திகள், கட்டுரைகள், தஃப்ஸீர்கள், நூல்கள், ஜுமுஆ பேருரைகள் மற்றும் வீடியோ பிரிவும் அடங்கியுள்ளது. குர்திஷ் மொழியாக்க குழுவின் ஒத்துழைப்புடன் இந்த Website ல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பல்வேறு நூல்களுடன் ஏனைய நூல்களும் வழங்கப்பட்டுள்ளன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்கள் உள்ளன. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா அவர்களின் நூல்களும் உள்ளன. ஏனைய ஜமாஅத்தின் நூல்களும் உள்ளன. அவற்றில் இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம், இந்தியாவில் இயேசு, இமாமின் அவசியம், ஹகீகத்துல் வஹீ, தஃவத்துல் அமீர், மன்ஸபே கிலாஃபத் போன்ற நூல்களும் அடங்கும். எனவே ஜுமுஆவிற்குப் பிறகு இந்த Website துவங்கப்படும். அல்லாஹ் அருள் செய்வானாக.

அதேபோன்று இன்றைய உலகின் சூழலுக்காக துஆக்களை தொடர்ந்து செய்யுமாறும் நான் கூற விரும்புகின்றேன். அல்லாஹ் உலகை அழிவிலிருந்து பாதுகாப்பானாக. மனிதர்களுக்கு அறிவை வழங்குவானாக. மேலும் தம்மைப் படைத்த இறைவனை அவர்கள் அடையாளம் கண்டு கொள்ளட்டுமாக.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

## ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜப்பான் சுற்றுப் பயணம் – 2013

**10 நவம்பர் 2013 (ஞாயிற்றுக்கிழமை)**

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காலை 5:15 மணியளவில் ஹோட்டலிலுள்ள ஒரு ஹாலில் வருகை தந்து ஃபஜர் தொழுகையை தொழ வைத்தார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்திற்கு திரும்பிச் சென்று விட்டார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காலையில் அலுவலக கடிதங்களை படித்து உரிய வழிகாட்டல்களை வழங்கினார்கள்.

**நாகோயாவிலிருந்து டோக்கியோவிற்கு புறப்பாடு**

இன்று நிகழ்ச்சி நிரலுக்கேற்ப நாகோயாவிலிருந்து இரயில் மூலமாக டோக்கியோவிற்கு புறப்பட வேண்டியதிருந்தது. ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காலை 10:00 மணியளவில் ஹோட்டலிலிருந்து வெளியே வருகை தந்தார்கள். அப்போது ஹோட்டலின் லாபியில் பெண்களும், சிறுமிகளும் தமது அன்பிற்குரிய எஜமானரை வழியனுப்பி வைத்தப்பதற்காக வருகை தந்திருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் சிறுமிகளின் ஒரு குழுவினர் துஆக்களை உள்ளடக்கிய பாடலை பாடினர். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது கையை உயர்த்தியவாறு அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். மேலும் கூட்டுத் துஆ செய்தார்கள். அதன் பிறகு நாகோயா இரயில் நிலையத்திற்கு புறப்பட்டுச் சென்றார்கள். 10:35 ற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இரயில் நிலையத்தை வந்தடைந்தார்கள். அங்கிருந்து 11:03–ல் டோக்கியோவிற்கு இரயில் வண்டி புறப்பட இருந்தது. வண்டி தனது குறித்த நேரத்தில் சரியாக 11:01 நிமிடத்திற்கு தனது பிளாட் ஃபார்மில் வந்தடைந்தது. மேலும் 11:03 ற்கு டோக்கியோவிற்கு புறப்பட்டது.

ஜப்பானில் வண்டிகள் குறித்த நேரத்திற்கு வந்து விடுகின்றன. மேலும் தமது நேரத்தில் புறப்பட்டும் சென்று விடுகின்றன. நேரத்தின் அடிப்படையில் ஒரு நிமிடம் கூட தாமதம் ஆகுவதில்லை. நாகோயாவிலிருந்து டோக்கியோவிற்கான தூரம் சுமார் 350 கி.மீ ஆகும். அந்த புல்லட் இரயிலான நஸோமி சூப்பர் எக்ஸ்பிரஸ் வண்டியின் வேகம் சில இடங்களில் மணிக்கு 280 கி.மீ ஆகும். சில இடங்களில் மணிக்கு 300 கி.மீ வேகத்தில் செல்லும்.

வழியில் இந்த இரயில் Yokohama, Shinagawa என்ற இரண்டு இரயில் நிலையங்களில் நின்றவாறு 12:33 நிமிடத்தில் டோக்கியோ இரயில் நிலையத்தை சென்றடைந்தது. டோக்கியா இரயில் நிலையத்தில் ஜமாஅத் உறுப்பினர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வரவேற்பதற்காக வருகை தந்திருந்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு 1:10 மணிக்கு தமது தங்குமிடமான Ana Intercontinental ஹோட்டலுக்கு வருகை தந்தார்கள். 2:00 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹோட்டலின் ஒரு ஹாலில் வருகை தந்து லுஹர் மற்றும் அஸர் தொழுகையை ஜமு செய்து தொழ வைத்தார்கள். (அந்த அறை தொழுகைக்காக பெறப்பட்டிருந்தது). தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்திற்கு சென்றார்கள்.

**டோக்கியோவில் பத்திரிகையாளர் சந்திப்பு**

இன்று Continental என்ற அதே ஹோட்டலில் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஒரு பத்திரிகையாளர் சந்திப்பும் நடைபெற இருந்தது. அதில் பத்திரிகை பிரதிநிதிகள் மட்டுமின்றி ஏனைய சில ஜப்பானிய விருந்தினர்களும் பங்கு பெற்றிருந்தனர். விருந்தினர்களின் மொத்த எண்ணிக்கை 64 ஆக இருந்தது. அதில் Yomiuri, Chugai Nippo பத்திரிகைகளின் 3 நிருபர்கள் மட்டுமின்றி 2 பாராளுமன்ற உறுப்பினர்களும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த 7 தலைவர்களும். Shinto Temple அதன் தலைவரும், பேராசியர்களும், மருத்துவர்களும், ஏனைய விருந்தினர்களும் பங்கு பெற்றிருந்தார்கள்.

நிகழ்ச்சி நிரலுக்கேற்ப 6:00 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூட்டம் நடைபெற இருந்த ஹாலிற்கு வருகை தந்தார்கள். மேலும் திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. மதிப்பிற்குரிய ஹாபிழ் அம்ஜத் ஆரிஃப் சாஹிப் திலாவத் செய்தார்கள். மேலும் ஃபர்ஹான் மலிக் சாஹிப் அதன் ஜப்பானிய மொழியாக்கத்தை வாசித்துக் காட்டினார்கள். அதன் பிறகு அன்பிற்குரிய உமர் அஹ்மத் டார் ஓர் அறிமுக உரையை நிகழ்த்தினார். அதன் பிறகு அன்பிற்குரிய ஹஸ்கீல் அஹ்மது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அறிமுகம் தொடர்பான தமது சொற்பொழிவை நிகழ்த்தினார். இன்று இந்த பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளக் கூடிய விருந்தினர்களில் ஜப்பான் நாட்டின் எல்லாரையும் விட மிகவும் மூத்த பாராளுமன்ற உறுப்பினரான Dr. Jimi Shozaburo அவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். அன்னார் 38 ஆண்டுகள் வரை ஜப்பான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார்கள். நிதியமைச்சராகவும், போஸ்டல் சர்வீஸ் அமைச்சராகவும் இருந்துள்ளார்கள். அன்னார் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் அமர்ந்திருந்தார்கள்.

அன்னார் தமது சொற்பொழிவை முன் வைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்: இன்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் அமர்வது எனக்கு மிகவும் கண்ணியத்திற்குரியதும், மரியாதைக்குரியதும், அசாதாரண பெருமைக்கு காரணியாகவும் அமைந்துள்ளது. மேலும் நான் இன்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வரவேற்பதில் என்னை நான் நற்பேறு பெற்றவராக கருதுகின்றேன். ஜப்பானில் வந்த நில நடுக்கம் மற்றும் சுனாமிக்குப் பிறகு சுற்றுப்பயணம் செய்தவாறு திடீரென ஒரு பள்ளிக் கூடத்திற்கு சென்றேன். அப்போது அங்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ''மனிதம் முதலில்'' அமைப்பின் முகாம் நடத்தப்படுவதை கண்டேன். மேலும் இந்த மக்கள் முதன் முதலில் தொண்டிற்காக வந்தடைந்திருப்பதை கண்டேன். அவர்களின் உணர்வு மதிக்கத்தக்கதாகும். அவர்களிடம் உத்வேகமும், ஆர்வமும் இருந்தது.

நான் இன்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சமூகத்தில் குறிப்பாக எனது நன்றியை தெரிவித்துக் கொள்வதற்காக வருகை தந்துள்ளேன். அந்த துன்பத்தின் நேரத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் எங்களுக்கு மிகவும் தொண்டாற்றியுள்ளது. நான் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஐரோப்பிய பாராளுமன்ற சொற்பொழிவு மற்றும் கேப்பிட்டல் ஹில் சொற்பொழிவு ஆகியவற்றை படித்தபோது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் முக்கியத்துவத்தைப் பற்றி என்னால் கணிக்க முடிந்தது. எனவே ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு விமான நிலையத்தில் உரிய பாதுகாப்பு வழங்குவதற்காக நானும் எனது எளிய முயற்சியை செய்துள்ளேன். ஏனென்றால் நான் அரசாங்கத்தில் பல்வேறு துறைகளில் அமைச்சராக இருந்துள்ளேன். எனவே முக்கிய நபர்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு வழங்கப்படுகின்றது என்பதை நான் அறிந்திருந்தேன்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 1951 ஆம் ஆண்டு சான் பிரான்ஸிஸ்கோ (அமெரிக்கா)வில் ஓர் உடன்படிக்கை நடந்தது. அதில் ஜப்பான் மீது சில கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அப்போது அந்த நேரத்தில் பாகிஸ்தானின் வெளியுறவு துறை அமைச்சர் சர் முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் ஜப்பானிற்கு ஆதரவாக ஒரு சிறப்பான வரலாற்று சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். உடன்படிக்கையும், கட்டுப்பாடுகளும் ஜப்பானுடன் நீதி மற்றும் நேர்மையை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட வேண்டும். பழிவாங்குதலை அடிப்படையாகக் கொண்டு நடைபெறக் கூடாது. எதிர்காலத்தில் ஜப்பான் முழு உலகிலும் பொருளாதார ரீதியிலும், அமைதியின் அடிப்படையிலும் ஒரு முக்கிய பங்காற்றக் கூடிய நாடாக திகழும் என்றும் அன்னார் கூறியிருந்தார்கள். எனவே அன்னார் ஜப்பானின் விடுதலையிலும், ஜப்பானின் முன்னேற்றத்திலும் மிக மகத்துவமிக்க தொண்டாற்றியுள்ளார்கள்.

நான் ஜப்பானுடைய ஓர் அமைச்சர் என்ற முறையில் உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். ஜஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒரு சிறப்பான உறுப்பினராக இருந்தார்கள். அன்னார் ஜமாஅத்திற்கு ஆதரவாக ஏராளமான பணி செய்துள்ளார்கள்.

நான் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கின்றேன். மேலும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வருகை நல்வரவு ஆகட்டுமாக. ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சமூகத்திற்கு வருகை தந்து நான் மகிழ்ச்சியை உணர்கின்றேன் என்று விருந்தினர் தமது சொற்பொழிவின் இறுதியில் கூறினார்.

இதன் பிறகு பத்திரிகை நிருபர்கள் சார்பாக கேள்விகளின் தொடர் ஆரம்பமானது.

பத்திரிகை நிருபர் சார்பாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் அந்தஸ்து தொடர்பாக கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: பைபிள் என்பது பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டின் தொகுப்பு ஆகும். அதனை நாங்கள் கிறிஸ்தவர்களின் வேதமாக ஒப்புக் கொள்கின்றோம். கிறிஸ்தவத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு ஒரு நபியின் அந்தஸ்தை விட அதிகமாக இறை அந்தஸ்து வழங்கப்படுகிறது. இஸ்லாம்

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 28 April 2022 Issue No. 17

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை ஒரு நபி என்று ஒப்புக் கொள்கின்றது. எவ்வாறு உலகின் ஏனைய சமுதாயங்களில் நபிமார்கள் வந்தார்களோ அதேபோன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் வந்தார்கள். இரண்டு மார்க்கங்களின் போதனையில் இதுவே வித்தியாசமாகும். நாங்கள் ஒரு மனிதருக்கு கொடுக்க வேண்டிய அந்தஸ்தையும், இறைவனின் அன்பருக்கு கொடுக்க வேண்டிய அந்தஸ்தையும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு கொடுக்கின்றோம்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இந்த கருத்து வேறுபாட்டிற்கு மத்தியிலும் நாங்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் அசல் அந்தஸ்தை எடுத்து வைக்கின்றோம். தற்போது கிறிஸ்தவத்திலும் ஏராளமான பிரிவுகள் எப்படிப்பட்டவர்களாக உள்ளனர் என்றால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் அந்தஸ்து இறை அந்தஸ்து இல்லை என்பதை அவர்களும் உணர்ந்து விட்டார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஒரு கேள்விக்கு பதிலளித்தவாறு இவ்வாறு கூறினார்கள்: பைபிளின் அடிப்படையில் அவர் பனீ இஸ்ராயீலின் சீர்திருத்தத்திற்காக வந்திருந்தார்கள். காணாமல் போன 12 கோத்திரத்தின் சீர்திருத்தத்திற்காக அன்னார் வருகை தந்தார்கள் என்றே பைபிளில் குறிப்பு உள்ளது. இன்னும் கூறப்போனால் நான் 12 கோத்திரங்களின் சீர்திருத்தத்திற்காக வந்துள்ளேன் என்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சுயமே ஒப்புக் கொள்கின்றார்கள். எனவே அவர் இறைவன் ஆவார் என்ற இந்த கொள்கை பைபிளின் அடிப்படையிலேயே பொய்யாகி விடுகின்றது. நீங்கள் ஆராய்ந்து பைபிளை படித்தால் அன்னார் 12 கோத்திரங்களுக்காக வந்திருந்தார்கள் என்பதும், அன்னார் இறைவன் இல்லை என்பதும் உங்களுக்கு தெரிந்து விடும்.

முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் எவ்வாறு தங்களுக்குள் ஒன்றுபட முடியும் என்ற கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இது மிகவும் நல்ல விஷயமாகும். திருக்குர்ஆன் இது குறித்து கூறியுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்: நீர் கூறுவீராக! வேதத்தையுடையவர்களே! எங்களுக்கும், உங்களுக்குமிடையில் ஒன்றுபட்ட ஒரு கருத்தின் பால் வாருங்கள். (அதாவது) நாம் அல்லாஹ்வையன்றி வேறெவரையும் வணங்க மாட்டோம்; அவனுக்கு வெறெதனையும் இணை வைக்க மாட்டோம்; அல்லாஹ்வை விட்டு விட்டு நம்முள் சிலர், வேறு சிலரை கடவுளாக ஆக்கிக் கொள்ள மாட்டோம். (3:65).

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இந்த உலகத்திற்கு ஓர் இறைவன் இருக்கின்றான். அவன் அனைத்து ஆற்றலுக்கும் எஜமானன் ஆவான் என்பதை ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்கின்றனர். எனவே நோக்கத்தை பெறுவதற்காக ஏக இறைவனிடத்தில் அனைத்து மார்க்கமும் ஒன்றுபட வேண்டும். ஏனைய அனைத்து மார்க்க கருத்து வேறுபாடுகளையும் முடித்து விட வேண்டும். மார்க்க விவகாரம் உள்ளத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

لَآ اِکۡرَاہَ فِی الدِّیۡنِ என்று அல்லாஹ் கூறியுள்ளான். மார்க்கத்தில் எந்த பலவந்தமும் இல்லை. ஒவ்வொருவரும் மார்க்க விவகாரத்தில் சுதந்தரமானவராக இருக்கின்றார். அனைத்து மார்க்கங்களும் இறைவன் புறமிருந்து தோன்றியுள்ளது. பின்னர் பின்னர் அனைத்து மார்க்கங்களும் ஏக இறைவனை வணங்க வேண்டும் என்ற விஷயத்தின் கீழ் ஒன்றுகூட வேண்டும். மேலும் அந்த இறைவனின் படைப்பினங்கள் தங்களுக்குள் ஒருவர் மற்றவருடன் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் இதே ஆலோசனையை பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கியுள்ளார்கள். 1897 ஆம் ஆண்டில் கோல்டன் ஜூப்ளி சந்தர்ப்பத்தில் விக்டோரியா மகாராணிக்கு அன்னார் தஹ்ஃபா கைஸரிய்யா என்ற பெயரில் நூல் ஒன்றை எழுதி விக்டோரியா மகாராணிக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த நூலில் அன்னார் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். மேலும் உலக அமைதி மற்றும் சகோதரத்துவம் மற்றும் நேசத்திற்கு அடித்தளமாக அமையக் கூடிய வழிமுறைகளையும் எடுத்துரைத்துள்ளார்கள். அதில் அன்னார் (அலை) அவர்கள் இந்த விஷயத்தின் பக்கம் கவனமூட்டினார்கள். ஒருவர் மற்றவர் மார்க்கத்தின் மீது ஆட்சேபனை செய்வதற்கு பகரமாக ஒருவர் மற்றவரின் மார்க்கத்திற்கு கண்ணியம் அளிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

எவரும் மற்றவருடைய மார்க்கத்தின் மீது ஆட்சேபனை செய்யக் கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஒருவருக்கொருவர் பரஸ்பர சகோதரத்துவமும், நேசமும், மத நல்லிணக்கமும் நிலைபெற முடியும். மேலும் தமது மார்க்கத்தை சுதந்திரமாக பிரச்சாரம் செய்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்க வேண்டும். எவர் விரும்புகின்றாரோ அவர் ஒப்புக் கொள்ளட்டும். எவர் விரும்புகின்றாரோ அவர் மறுக்கட்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத் இன்று உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காக முயற்சி செய்து வருகின்றது. எல்லா பக்கமும் இதே தூதுச் செய்தி தான் சென்றடைகின்றது.

ஒரு கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: உலகின் எல்லா சமுதாயத்திலும் நபி வந்துள்ளதாக திருக்குர்ஆனில் இறைவன் கூறியுள்ளான். சிலரைப் பற்றி திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. சிலரைப் பற்றி பைபிளில் கூறப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக 1,24,000 எண்ணிக்கையில் குறிப்பு கிடைக்கின்றது. அல்லாஹ் எல்லா சமுதாயத்திலும் நபியை அனுப்பியுள்ளான் என்பது எங்களது கொள்கை ஆகும். நாங்கள் ஹஸ்ரத் புத்தர் (அலை) அவர்களை இறைவனின் நபியாக ஏற்றுக் கொண்டுள்ளோம். எந்தவொரு நபிக்கும் உள்ள அதே அந்தஸ்து அவருக்கும் உள்ளது.

ஒரு கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் என்ற சொல் இஸ்லாத்தில் இறைவனுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இது அல்லாஹ்வின் எப்படிப்பட்ட பெயர் என்றால் அதில் அவனது அனைத்து பண்புகளும் இடம் பெற்றுள்ளன. அல்லாஹ்விற்கு எல்லையற்ற பண்புகள் உள்ளன. நமக்கு வெறும் 99 பண்புகளைப் பற்றியே தெரிந்துள்ளது அல்லது சில இடங்களில் 104 பண்புகளும் கூறப்பட்டுள்ளன. இந்த உலகில் அல்லாஹ்வின் கட்டளையால் என்னென்ன பணிகள் அல்லது மாற்றங்கள் நடைபெறுகின்றனவோ அல்லது நடைபெற முடியுமோ அவை அனைத்தும் இறைவனின் ஏதாவதொரு பண்பின் கீழ் நடைபெறுகின்றது. எனவே ஏகத்துவமும், இறைவனின் பண்புகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதல்ல.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: தற்போது திருக்குர்ஆன் வசனம் ஓதப்பட்டது. அதில் இறைவனின் பண்புகளான ரஹ்மான், ரஹீம், மறைவானவற்றையும், நிகழ்காலத்தையும் அறியக் கூடியவன், எஜமானன், தூயவன், அமைதி வழங்கக் கூடியவன், படைத்தவன் போன்ற பண்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஏகத்துவத்திலும், பண்புகளிலும் ஏதாவதொரு முரண்பாடு இருந்திருந்தால் பின்னர் இறைவன் சுயமே தனது இந்த பண்புகளை திருக்குர்ஆனில் எடுத்துரைத்திருக்க மாட்டான்.

ஒரு கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: திருக்குர்ஆன் இறுதியான மற்றும் முழுமையான வேதம் ஆகும். ஷரீஅத் ஆகும். முழுமையான ஷரீஅத் என்பது எது என்றால் அதில் எல்லா வகையான சிறப்புகளும் காணப்படுகின்றன. திருக்குர்ஆனில் அனைத்து அவசியமான விஷயங்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன என்பது எங்களின் நம்பிக்கை ஆகும். இன்னும் கூடுதலாக உள்ளூர் சடங்குகளும், மரபுகளும் உள்ளன. இஸ்லாமிய போதனையுடன் அந்த சடங்குகளும், மரபுகளும் முரண்படவில்லையென்றால் பின்னர் அவற்றை மேற்கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. முஸ்லிம் ஆக்குவதற்காக இஸ்லாமிய போதனையுடன் மோதக் கூடிய மற்றும் இஸ்லாம் அனுமதி தராத விஷயங்களை மேற்கொள்ளுங்கள் என்று இஸ்லாம் கூறவில்லை.

(ஆதாரம்: உருது பத்ர் பத்திரிகை 13 மார்ச் 2014)

தொடரும்.....

......☆......☆......☆......

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad